விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 02 புதன்கிழமை (15.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 117

# ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே புலிகளுடன் நிரந்தர போர் நிறுத்தம்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

நிரந்தரமான ஒரு போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையைத் திட்டவட்டமாக மறுத்துள்ள அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடும் வரையில் அவ்வாறான போர் நிறுத்தம் ஒன்றுக்கு இடமே இல்லை என உறுதியாகத் தெரிவித்திருக்கின்றது. (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளியுறவுச் செயலரை கூட்டமைப்பினர் நாளை சந்திப்பர்

(புதுடில்லி)

இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை எந்த நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலும் இந்திய அரசு பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை என இந்திய வெளியுறவுத்துறை இணை அமைச்சர் ஆனந் சர்மா தெரிவித்துள்ளார்.

இந்திய அரச குழுவினரை இலங்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு நாளையும் மறுதினமும் சந்தித்துப் பேசவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று செய்தியாளர்களின் கேள்விகளிற்கு பதிலளித்த அவர் மேலும் கூறியதாவது, இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முடியாது என்பதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மோதல் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறது.

இலங்கையில் மருத்துவ உதவிகள் உட்பட பாதிக்கப்பட்ட மக்களிற்கு நிவாரண உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது இந்திய முப்படையின் மருத்துவக் குழுக்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## மோதலில் சிக்கியுள்ள மக்களை வெளியேற அனுமதிக்க வேண்டும்

### செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை

(லண்டன்)

இலங்கையில் மோதல் நடக்கும் பிரதேசத்திலுள்ள பொதுமக்கள் அந்த இடத்திலிருந்து வெளியேறுவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளரான போல் ஹஸ்ரல்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகள் அங்குள்ள பொதுமக்களை வெளியேற விடாமல் தடுக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை இலங்கை அரசு தொடர்ந்து கூறுகிறது.

எனவே அங்கு மோதல் நிறுத்தப்பட்டாலும் இந்தப் பிரச்சினை இருக்கும் என்றே நான் நினைக்கிறேன். (12ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளனிலிருந்து 500 பேர் நேற்று புல்மோட்டை சென்றனர்

(கொழும்பு)

புதுமாத்தளனில் இருந்து மேலும் ஒரு தொகுதி காயமடைந்த மற்றும் அவர்களின் உறவினர்கள் செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் அழைத்துச் செல்லப்பட்டதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

கிரீன் ஓசன் கப்பல் மூலம் நேற்று சுமார் 500 வரையான காயமடைந்த மற்றும் அவர்களின் உறவினர்கள்அழைத்துச் செல்லப்பட்டதாக சங்கத்தின் பேச்சாளர் சரசி விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு புதுமாத்தளனில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டவர்கள் முதலில் புல்மோட்டையில் உள்ள இந்திய கள வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுவர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினால் (12ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை இன்று இடம் பெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம் பெறும் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

கப்பல் (12ஆம் பக்கம் பார்க்க)



## சமாதான அனுசரணைப் பணி 3 வருடங்களுக்கு முன் நிறைவு

### நோர்வே விளக்கம்

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளர்கள் என்ற நிலை ஏற்கனவே நீங்கிவிட்டதாக இலங்கைக்கான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பவர் தெரிவித்துள்ளார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததைத் தொடர்ந்து அனுசரணையாளர்களாக தம்மால் பணியாற்ற முடியவில்லை என அவர் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகள் 2006ஆம் ஆண்டு முறிவடைந்த (12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...

தமிழ் நாட்டின் பிரபல
சோதிடர் 'சோதிட கலைமாமணி'
சிவல்புரி சிங்காரம் எழுதும்
புத்தாண்டில் உங்கள்
சித்திரை மாதப் பலன்



புதுவருடமாகிய நேற்று வன்னி பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் கஞ்சி வாங்குவதற்காக முண்டியடிக்கும் சிறுவர்களைப் படங்களில் காணலாம்.

## வன்னியில் உணவுத் தட்டுப்பாடு; கஞ்சிக்கு கையேந்தும் சிறுவர்கள்

(வவுனியா)

வன்னி பாதுகாப்பு வலயப் பகுதியில் உணவுப் பொருட்களின் விலைகள் உச்சமடைந்துள்ளதால் மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அங்கு சில கடைகளே இருப்பதாகவும் அவற்றில் ஒரு கிலோ அரிசி 300 ரூபாய்க்கும், ஒரு கிலோ கோதுமை மா 350 ரூபாய்க்கும், சீனி ஒரு கிலோ 2000 ரூபாய்க்கும் ஒரு கிலோ வெங்காயம் 9000 ரூபாய்க்கும், பால்மா பைக்கற் ஒன்று (400கிராம் நிறையுடையது) 2200 ரூபாய்க்கும், மிளகாய் ஒரு கிலோ 9000 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத்திட்டத்தினால் பத்து நாட்களுக்கு முன்னர் ஒரு தொகுதி (12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலம்பெயர் தமிழர்களின் போராட்டம் பிரித்தானிய ஊடகங்கள் ஆராய்வு!

(இலண்டன்)

தமிழ் மக்களால் தற்போது நடத்தப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்பாக பிரித்தானியாவில் இருந்து வெளிவரும் முக்கிய நாளேடுகள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுள்ளன.

அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றின் முக்கிய பகுதிகள் அடங்கிய தொகுப்பு வருமாறு;

**த கார்டியன்**

இலங்கையில் நடைபெற்று வரும் இனப் பிரச்சினையை வட. அயர்லாந்தில் ஏற்பட்ட பெரிய வெள்ளி ஒப்பந்தத்தை போல நிறைவு செய்ய இலங்கை அரசு முயல வில்லை. மாறாக எறிகணைகள் மூலம் அங்கு வாழும் மக்களை படுகொலை செய்து அதனை முடிக்க அது முயற்சித்து வருகின்றது.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் 8 சதுர கி.மீ. பரப்பளவுள்ள கடற்கரை பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். அதனை அரசு பாதுகாப்பு பிரதேசம் எனக் கூறினாலும் அது உலகிலேயே மிகவும் ஆபத்தான பகுதி என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மூன்று நாட்களில் அங்கு 128 பேர் கொல்லப்பட்டதுடன் 629 பேர் காயமடைந்துள்ளதாக புதுமாத்தளன் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பால்மா வாங்குவதற்கு என வரிசையில் நின்ற பொது மக்கள் மீது எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

அரசு இதனை மறுத்துள்ள போதும் 120 மி.மீ எறிகணைகளின் சிதறல்களை மருத்துவர்கள் காண்பித்துள்ளனர். அதனை படையினரே அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

படையினர் வன்னியில் இருந்து வரும் மக்களை விடுவிப்பதில்லை. அவர்களை முகாம்களில் அடைத்து வைத்துள்ளனர். அவர்களை வெளி உலகுடன் தொடர்பு கொள்ளவும் அனுமதிப்பதில்லை. முட்கம்பிகளினால் சூழப்பட்ட இந்த முகாம்களையாரும் அணுக முடியாது.

உதவி அமைப்புக்களைச் சேர்ந்தோர் அங்கு செல்ல அனுமதிக்கப்படுகின்ற போதும், அங்கு என்ன நடை பெறுகின்றது என்பதை கண்காணிப்பதற்கு அவர்களை அரசு அனுமதிப்பதில்லை.

முகாமில் எத்தனை பேர் உள்ளனர். எத்தனை பேர் காணாமல் போயுள்ளனர் போன்றன தொடர்பான விபரங்களும் தெரிவ தில்லை. வெள்ளை வான் கடத்தல்கள் மூலம் வவுனியாவில் ஒரு மாதத்தில் 25 பேர் காணாமல் போயுள்ளனர்.

ஆனால், இடம் பெயர்ந்த மக்களை எவ்வாறு பராமரிக்க வேண்டும் என்பதற்கு அனைத்துலக விதிகள் உள்ளன. அவர்களிற்கு மருந்து, உணவு, உறைவிடம் என்பன வழங்கப்பட வேண்டும் தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்ள அவர்களை அனுமதிக்க வேண்டும். தமது கிராமங் களுக்கு திரும்பவும் அவர்களுக்கு உரிமை உண்டு.

**த இண்டிபெண்டன்**

பிரித்தானியாவில் உண்ணா நோன்பு இருப்பவர்களின் போராட்டத்தை பலர் லெப். கேணல் திலீபனின் போராட்டத்துடன் ஒப்பிடுகின்றனர். திலீபன் விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவர். அவர் 1987ஆம் ஆண்டு உண்ணா நோன்பு இருந்து மரணத்தை தழுவியிருந்தார்.

விடுதலைப் புலிகளை பிரித்தானியா தடை செய்துள்ளது. ஆனால் பெரும்பாலான தமிழ்மக்கள் அவர்களை விடுதலைப் போராட்ட வீரர்களாகவே பார்க்கின்றனர். படையினரின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அவர்களால் மட்டுமே போராட முடியும் என நம்புகின்றனர்.

இந்த வாரத்தின் தொடக்கத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்த தமிழ் மக்களின் தேசியக் கொடியை பொலிஸார் அகற்ற முற்பட்டிருந்தனர். அது பாரிய அசம்பாவிதங்களை தோற்றுவித்திருந்தது. ஆனால் பின்னர் கொடிகள் வைத்திருப்பதை பொலிஸார் அனுமதித்திருந்ததை காண முடிந்தது.

தமிழ் மக்களையும் மனிதர்களாக மதியுங்கள் என்பதையே நாம் பிரித்தானிய அரசுடம் கேட்கிறோம். அவர்கள் ஏதாவது செய்தே ஆக வேண்டும். ஏன் எனில் யாரும் அதனை செய்வார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது என உண்ணா நோன்பினை மேற்கொள்ளும் பரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

**ரெலிகிராஃப்**

போர் நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென அனைத்துலக சமூகம் மேற்கொண்டு வரும் அழைப்புக்களை இலங்கை அரசு நிராகரித்து வருகின்றது. இந்நிலையில் பல நாடுகளில் தமிழ் மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக உலக மக்கள் தவறான கருத்தை கொண்டிருப்பது தொடர்பாக நாம் வேதனை அடைகிறோம் என இலண்டன் கிங் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவி லக்ஸ்மி தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்பதை நாம் உலகிற்கு கூற முயலுகிறோம். அவர்களும் எமது சமூகத்தை சேர்ந்த சாதாரண மக்கள்தான் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**ஈவினிங் ஸ்ரான்டட்**

இலங்கையில் கொல்லப்படும் தமது தாய்மாருக்காக இந்தமகன்மார் ஏன் பிரித்தானியாவின் வெஸ்ட் மினிஸ்ரர் பாலத்தை முடக்கினார்கள்? படை நடவடிக்கை இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ள நிலையில் அது பிரித்தானிய தமிழ் மக்களை கொதிப்படைய செய்துள்ளது.

போர் நிறுத்தம் தொடர்பாக ஐ.நா. நட வடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் பிரித்தானிய அரசு, இலங்கை அரசுடன் இணைந்து செயற்படுவதாகவும் தமிழ் சமூகத்தினரிடையே கருத்துக்கள் தோன்றியுள்ளன.

பிரித்தானியா, உலக வங்கி, உலக நாணய நிதியம் போன்றவை வழங்கும் நிதிகளும் ஆயுத கொள்வனவுக்கு பயன்படுத்தப்படுவதாக குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

அரசின் நடவடிக்கைகளினால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் வெளியில் தெரிவதில்லை என்பதுடன், ஊடகங்களின் பார்வையிலும் விழுவதில்லை என்ற கருத்துக்களும் தோன்றியுள்ளன.

தற்போதைய போராட்டத்தை யாரும் ஒழுங்கு செய்யவில்லை. தற்போது இலங்கையில் தோன்றியுள்ள நிலை தொடர்பில் மாணவர்களாகிய நாம் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம்.

எனவே எமது செல்லிடப்பேசிகள் மூலம் தகவல்களைப் பரிமாறி இந்தப் போராட்டத்தை ஒ்ழுங்கமைத்திருந்தோம் என குயின் மேரி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவரான முருகவேல் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை உலகின் கவனத்திற்கு கொண்டு செல்வதில் வெற்றியும் அடைந்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

பிரித்தானியாவின் காலனித்துவ ஆட்சி தொடர்பாக நாம் நீண்ட வரலாற்றைப் பேசும் போது, இரு அரசாட்சிகளைக் கொண்டிருந்த சிறிலங்கா நிர்வாகத்தை இலகுவாக்ப் பேணும் நோக்குடன் பிரித்தானியா ஒரு நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவந்தது.

இதனைப் பிரித்தானியர்களே மேற்கொண்டிருந்தனர் என பேர்லி பகுதியில் உயிரியல் துறை ஆசிரியராக கடமையாற்றி ஓய்வுபெற்ற என்.குலரட்ணம் என்பவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

**த ரைம்ஸ்**

படையினருக்கு எதிராக அனைத்துலக சமூகத்தின் அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன. பாதுகாப்புப் பிரதேசத்தின் மீது எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடாது என்ற அழுத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரித்தானியாவில் தமிழ் மக்கள் தமது போராட்டங்களை தொடர்ந்து வருகின்றனர். 26 வருட மோதல்களை முடிபுக்குக் கொண்டு வருவது எவ்வாறு என்பது தொடர்பாக 4 நாடுகள் கலந்துரையாடி வருகின்றன.

வன்னியில் பொதுமக்களின் இழப்புக்களின் எண்ணிக்கை வானைத் தொட்டுள்ளதாக மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. கடந்த மூன்று நாட்களில் பாதுகாப்பு பிரதேசத்தில் 120 பேர் கொல்லப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் பாதுகாப்பான பிரதேசத்தின் மீது தாக்குதல்களை நடத்தவில்லை என அரசு மறுத்து வருகின்ற போதும் அது அங்கு சுதந்திர ஊடகவியலாளர்களையும், மனித உரிமைக் குழுவினரையும், உதவி நிறுவனப் பணியாளர்களையும் அனுமதிக்க மறுத்து வருகிறது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் இருந்து எமது ஊடகவியலாளர்களுக்கும் இலங்கை அரசு நுழைவு அனுமதி வழங்க மறுத்து வருகிறது. (எ-5)

## எதிர்க்கட்சியின் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர்

(பெங்களூர்)

இந்திய நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்திற்காக சென்ற அமைச்சர் ஒருவர் தவறுதலாக எதிர்க்கட்சியினர் ஏற்பாடு செய்திருந்த தேர்தல் பிரசார கூட்ட மேடையில் ஏறி பேசத் தொடங்கியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.


கர்நாடகாவில் நடந்த இச்சம்பவத்தில் கர்நாடக உள்துறை அமைச்சர் வி.எஸ். ஆச்சாரியா, தான் சென்ற வழியில் நடைபெற்றுக் கொண்டிருந்த தேர்தல் பிரசார கூட்டத்தைக் கண்டு அது தனது கட்சியான பா.ஜ.கவின் கூட்டம் என நினைத்து அந்தக் கூட்டத்திற்கு சென்றுள்ளார்.

அங்கு அமைச்சர் அந்தக் கூட்ட மேடையில் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக காரசாரமாகப் பேசத் தொடங்கினார்.

இதையடுத்து அங்கிருந்தவர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டது. இந்நிலையில் அக் கூட்டம் காங்கிரஸ் கட்சியினுடையது என்பதை உணர்ந்த அமைச்சர் அங்கிருந்து வெளியேறினார்.

(ச-14)






உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஹற்றன் நஷனல் வங்கியினால் நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களையும், ஹற்றன் நஷனல் வங்கியின் பத்தும் விமன சீட்டிழுப்பில் வெற்றியீட்டியவர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் சிறிஸ்கந்தமூர்த்தி மங்கல விளக்கேற்றுவதையும் இளைப்பாறிய அதிப[illegible] அ.பஞ்சலிங்கம் உரையாற்றுவதையும் பத்தும் விமன சீட்டிழுப்பில் வெற்றியீட்டியவருக்கு வங்கி முகாமையாளர் எஸ்.சுந்தரேஸ்வரன் பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில்காணலாம்.

படங்கள்:- அலுவலக செய்தியாள[illegible]

# இன்று ஒரு தகவல்

## மனத்தை ஒருமுகப்படுத்து

மனதுக்கு இரண்டு குணங்கள் உண்டு.

ஒன்று பலவிதமான எண்ணங்களில் குழம்பியிருக்கும் நிலை. இன்னொன்று எப்போதாவது சில சமயங்கில் ஒரே எண்ணத்தில் நிலைத்திருக்கும் நிலை.

அறிவியல் வல்லுநர்கள் ஒரே எண்ணத்தில் ஆழ்ந்து போய் இருப்பார்கள். அதனால் தான் புதுப்புது உண்மைகளைக் கண்டுபிடிக்க முடிகிறது.

ஒரு குழந்தைக்கு ஆபத்தென்றால் தாயின் நினைவு முழுவதும் குழந்தையிடமே இருக்கும்.

இப்படித் தன்னையறியாமல் சில சமயங்களில் ஒரே எண்ணத்தில் நிலைத்திருக்கும் மனத்தை நாம் அறிந்தே அது ஒரே எண்ணத்தில் நிற்கும் படியாகப் பழக்க வேண்டும்.

பதஞ்சலி முனிவர் இதற்கு ஒருசுலபமான வழியைச் சொல்கிறார். வேதாந்தத்தில் " சந்திர சாகா நியாயம்" என்று ஒரு வழி உண்டு. அதாவது சந்திரனை ஒரு மரக் கிளையைக் கொண்டு காட்டுதல்.

ஆகாயத்தில் இருக்கும் மூன்றாம் பிறையை ஒருவருக்குக் காட்ட வேண்டும் என்று வைத்துக் கொள்ளுங்கள். திடீரென்று சுட்டிக் காட்ட முடியாது.

முதலில் ஒரு மரத்தைக் காட்ட வேண்டும். அதன் பின் கிளையைக் காட்ட வேண்டும்.பின்னர் இலையைக் காட்ட வேண்டும் " அதற்கு நேராகப் பார் மூன்றாம் பிறை தெரியும் என்று சொல்ல வேண்டும்" இதே வழியில் மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும்.

இப்பொழுது உதாரணத்தக்கு, ஒருவர் ஒரு இசை நிகழ்ச்சிக்குப் போகிறார்.முதலில் மனம் என்ன நினைக்கிறது. பாடப் போகும் கலைஞரைப் பற்றி நினைக்க ஆரம்பிக்கிறது. அதன்பின்னர் அந்த சங்கீத வித்துவான் மறைந்து விடுகிறார். சங்கீதம் தான் மனதுக்குள் நிற்கும்.

அதன் பின் அதுவும் மறைந்து போய் அந்த சங்கீதத்தை அனுபவிக்க நான்– என்பது மட்டும் மனதில் நிற்கிறது. பழக்கத்தினால் இது போன்ற நிலையை அடிக்கடி அடைய வேண்டும்.

மனம் நெடுநேரம் வரைக்கும் ஒரே நிலையில் இருக்காது. நாம் பழக்கத்தினாலேயே இந் நிலைக்குக் கொண்டு வர முடியும். இந் நிலைக்கு வந்ததும் மனம் என்ன ஆகும் தெரியுமா?

ஒன்று – பழைய பல எண்ணங்கள் உள்ள நிலைக்கு வரும். அல்லது அந்த ஒரு எண்ணமும் மறைய அதன் காரணமாக மனம் அழிய... அது பிரம்மத்தை உணரும். இந்த முயற்சியில் தடங்கல்கள் ஏற்படலாம். அப்பொழுது தியானம் அவசியம் என்கிறார் மகரிஷி பதஞ்சலி.

இந்தக் கால இளைஞன்ஒருவன் தன்னுடைய மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும் என்று ஆசைப்பட்டான். ஒரு பெரியவரிடம் போய்,

" ஏதாவது வழி சொல்லுங்கள்" என்றான்.

"இன்றைக்கு இரவு வா... உனக்கு மூன்றாம் பிறையைக் காட்ட பயிற்சி கொடுக்கிறேன் ." என்றார்.

அதே மாதிரியே அவரிடம் போய் நின்றான். அவர் அவனை பக்கத்தில் நிற்க வைத்து பயிற்சி கொடுக்க ஆரம்பித்தார்.

"இதோ பார்.நான் சொல்வதை தீவிரமாகக் கவனி. அதோ தெரிகிறது பார் ஒரு பெரிய ஆலமரம். அந்த மரத்தில் வலது பக்கமாக ஒரு கிளை தெரிகிறது.

அந்த வலது பக்க கிளையின் நுனியில் ஒரு இலை தெரிகிறது. அந்த இலைக்கு நேராக பார்வையை செலுத்து நிலா தெரியும் என்றார்.

இவன் நன்றாகக் கூர்ந்து கவனித்தான்.

அதன் பின் இவரைப் பார்த்து, " தெரியவில்லையே" என்றான்.

"அதெப்படி தெரியாமல் போகும். நன்றாக கவனித்துப் பார்" என்றார்.

" எப்படிப் பார்த்தாலும் நிலா தெரியாது" என்றான்.

" ஏன் அப்படிச் சொல்கிறாய்" என்றார்.

"இன்றைக்கு அமாவாசை " என்றான்அவன்.

*தென்க்ச்சி கோ சுவாமிநாதன்*

# மொனராகலையில் ஞாயிறன்றும் துப்பாக்கிச் சூட்டில் மூவர் பலி

மொனராகலை மாவட்டத்திலுள்ள கல்டெம் எரா கிராமத்தில் ஞாயிறன்று இரவு ஆயுதக் குழுவொன் றினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக் கிச் சூட்டில்2 பெண்கள் உட்பட மூவர் கொல்லப்பட்டுள்ளனர். சம்பவத்தில் வெட்டுக் காயங்களுடன் மற்றுமொரு பெண் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிராமவாசிகள் புத்தாண்டுப்பண்டிகைக்குத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் அங்கு நுழைந்த ஆயுதக் குழுவொன்று இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

ஏற்கனவே இந்தப் பகுதியிலுள்ள மஹாகொடயாய என்ற கிராமத்தில் கடந்த ஞாயிறு இரவு இடம் பெற்ற இதே பாணியி லான சம்பவமொன்றில் 9 கிராம வாசிகள் கொல்லப்பட் டும்மற்றுமொருவர் காயமடைந்திருந்தும் இருந்தனர்.

இந்தச் சம்பவம் இடம் பெற்று 48 மணித்தியாலயத்திற்குள் நேற்று முன்தினம் இச்சம்பவம். இடம் பெற்றுள்ளது.

இந்த இரண்டுதாக்குதல்களும் விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ஓ-2)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கத்தோலிக்க உயர் கல்வி நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர் வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அக வொளி குடும்ப வளத் துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந் தினராக யாழ்.ஆயர் பேரருட் தோமஸ் சவுந்திர நாயகம் ஆண்டகை கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-2)

# மோதல் வலயங்களில் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு

மோதல் இடம்பெற்று வரும் பிரதேசங்களில் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்படவேண்டியது மிகவும் இன்றியமையாதென எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமை ப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

மோதல் வலயங்களில் சுயாதீன செய்திசேகரிப்பிற்கு அரசாங் கம் விதித்துள்ள தடை நீக்கப்பட வேண்டியது முக்கியமானதென தெரிவிக்கப்படுகிறது.

மோதல் இடம்பெற்று வரும் பிரதேசங்களில் மனித உரிமை நிலைமைகள் உக்கிரமடைந்து செல் வதாகவும் இந்த நிலைமை குறித்து உள்நாடு மற்றும் சர்வதேச சமூகங்களுக்கு தெரியப்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

நீதியான முறையில் யுத்த செய்திகளைச் சேகரித்து நாட்டு மக்களுக்கு அதனை தெரியப்படுத்தும் அடிப்படை உரிமையை அரசபடையினர் மறுதலித்து வருவதாக ஆர்.எஸ். எப்.குற்றம் சுமத்தியுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கையில் ஊடக அடக்கு முறை வெகுவாக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-2)

# க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்

**யாழ்.சென் ஜோண்ஸ் கல்லூரி**

**ஆங்கில மொழி**

ஏ.சஞ்சயன்-9A, எஸ்.அலெக்ஸ்டியன்-8A,C, எஸ். ஜனகன் 7A, B,C யு.நிலோஜன்-7A,B,C யூ.கப்ஸ்ரன் றொஷான்-6A,3B, எஸ்.யிதுஸ்மன்6A,2B,C கே.வருணன்6A, 2B,C வ.நிரோசன் 6A, 2B,S எம். ஜோன்பிரியந்-5A,4B, ஜெ.யூபேஷ்-5A,2B,2C ஆர்.பிரகதீஸ்வர்-4A,4B,C என்.தார்மீகன்-4A,4B,S எம்.நிரேர்தீபன்-4A,3B , 2C பி.அபிகரன்-4A,3B,C,S கே.முகுந்தன்-4A,2B,3C பி.பிரசாந்-4A,2B,C,2S

**தமிழ்மொழிமூலம்**

ஏ. அருள்நாதா-7A, 2B,ரி . துஷாந்-7A,B,C,வை.கார்த்திக்-6A,2B,C எஸ்.டக்சன்-5A, 4B,க. கோபிதன்-5A,4B,பி.பாலரூபன்-5A,2B,C,S எஸ்.சிவராம்-5A,2B , C,Sஎஸ்.நாவண்ணன்-4A,4B,C பி.தீபிகன்-4A,3B,C,S எஸ்.ஜனகன்-4A,2B,3C,எம்.தனோர்சன்-4A,2B,2C எஸ். கோபிதன்-4A,2B,2C,S,ஜி.கனகயோகன்-4A, 2B,2C,S,எஸ்.நதீஸன்-4A,2B, 2C,S,பி. கோகுலன்-4A,3C,2S.

**யாழ்ப்பாணக் கல்லூரி-வட்டுக்கோட்டை**

**ஆங்கில மொழிமூலம்**

கு. ராதிகேசன்-8A,C, ம.துளசி- 7A,2B,மி.அஞ்சுதன் ஜோகான்-7A,B,C,சி.வத்சனி-5A,4B,றொ. சில்வியா-5A,B,C,2S செ.துவாரகா-5A,2C , 2Sலோ. சிறிவிஜிதரன்-4A,3C, 2S யோ. ஜசித்தா-4A,B,C,2S,து. சகானவி-3A,3B,2C,S, சோ.திலக்சன்-3A,2B,2C,2S.

**தமிழ் மொழிமூலம்**

செ.சரிதா- 6A,2B,C,ப. மயுரதன்-6A,B,C,ச.மனோஜினி-5A, 4B,சி.கஸ்தூரி- 5A,2B, C,S,ச.ஜசீபன்- 5A,2B,C,S,பு.சரனியா-5A,2B,C,S, ரா.றெனுஜா- 5A,B, 3C,அ.மேரி டக்சாயினி-4A,3B , C,S, சி.கவுசிக்கா- 4A,2B, 3C,பா. சயந்தன்-4A,2B,2C,S, செ.யசோதா-4A,2B,2C,S.

க. தவரஞ்சன்-4A,B,3C, க.மஞ்சுலா-4A, 3C,2S, சி.சகானா-3A,4B,2C, செ.சிந் துஜன்-3A,3B,2C,S, பு.மசோதா-3A, 3B,2S,சி.கிறிசாந்-3A,2B, 2C,2S, சி.ராஜகோகிலன்-3A,2B, 2C, 2S, பா.ஸ்ரீகுகன்-3A, 2B, 3C,கு.பிரஸோபனன்-3A, B,4C,S, ம.விஞராஜ்-3A,B,4C,ர. கிறிஸ்ன மேனன்-3A,B,3C, 2S. (ஓ-2)

## இராசி பலன்

*15.04.2009*

*(சித்திரை 02, புதன் கிழமை)*

*சஷ்டி பின்னிரவு3.14 மணிவரை*

*மூலம் பின்னிரவு1.39 மணிவரை*

*இராகுகாலம் 12.04- 1.34 மணிவரை*

*சுபநேரம் 4.34-6.04 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், எதிர் பாராத செலவு, உறவினர் சந்திப்பு, உஷ்ண நிலை. |
| இடபம் | மரியாதைக் குறைவு, காரிய தடங்கல், ரோக நிலை, வீண் பகை. |
| மிதுனம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப சுகம், பொருள்சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | நோய் குணமடைதல், செய் தொழில் விருத்தி, முயற்சி கைகூடும் , பாராட்டு. |
| சிம்மம் | வியாபார நன்மை, பூர்வ புண்ணிய கருமம், குடும்பக் கவலை, அஜீரணக் கோளாறு. |
| கன்னி | மனச் சஞ்சலம்,புதிய முயற்சி, உறவினர்சந்திப்பு, சுப செலவு. |
| துலாம் | சகோதரர் உதவி, தனலாபம், எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம். |
| விருச்சிகம் | விதண்டாவாதம், தன விரயம், முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| தனுசு | சிந்தனை மிகுதி, வாக்கு மேன்மை, நல்ல முயற்சி, போசன சுகம். |
| மகரம் | பிரயாண அலைச்சல், தன விரயம், மனஸ்தாபம், வேலைச் சுமை. |
| கும்பம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், தனலாபம், பெருமை யடை தல், தேகநலன். |
| மீனம் | அதிகாரம், செய் தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும், பிறர் உதவி. |

வளவன்

## விரோதி வருட கைவிஷேஷம்

விரோதி வருட கை விசேஷத்திற்கு உகந்த நேரம் நாளை வியாழக் கிழமை காலை 7 . 25 மணி முதல் 9.16 மணி வரையும், மாலை 6.13 மணி முதல் முன்னிரவு 8.05 மணி வரையும் என வாக்கிய பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அண்மையில் மாதகல் விநாயகர் அறநெறிப் பாடசாலையில் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற புண்ணிய கிராம வேலைத் திட்டத்தைச் செயற்படுத்தும் ஒரு நாள் நற்பண்பு செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் மற்றும் சொற் பொழிவாளர்களான நவநீதன், அருளானந்தம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் சைவப் புலவர் நவராஜ் சொற்பொழிவாற்றுவதனையும் படத்தில் காணலாம்.

### இலங்கை தமிழர் பிரச்சினையில்

# இந்திய மத்திய அரசுக்கு அக்கறை இல்லை
# ப.சிதம்பரத்திற்கு டாக்டர் ராமதாஸ் பதிலடி



(சென்னை)

இலங்கை தமிழர் பிரச்சினையில் மத்திய அரசுக்கு அக்கறை இல்லை என்று மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்துக்கு டாக்டர் ராமதாஸ் பதில் அளித்துள்ளார்.

இது குறித்து பா.ம.க.நிறுவுனர் டாக்டர் இராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேர்தல் என்றதும் இப்போது ப.சிதம்பரத்திற்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை நினைவுக்கு வரத்தொடங்கியிருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயல்பாடு குறித்து பா.ம.க. விமர்சிப்பது நியாயமா? என்றும் அமைச்சரவைக் கூட்டத்திலோ அல்லது வேறு பொருத்தமான இடத்திலோ கருத்து வேறுபாடுகளைத் தெரிவித்திருக்கலாமே என்றும் உபதேசம் செய்திருக்கிறார். ஆட்சியில் இடம் பெற்றிருந்தாலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தனது நிலைப்பாட்டை ஒரு போதும் பா.ம.க விட்டுக்கொடுத்ததில்லை.

இலங்கைத் தமிழர்களை அரவணைத்துப் பாதுகாக்க வேண்டிய பெற்றோர்கள் என்ற முறையிலும் தமிழர்களின் தொடக்கத் தாயகம் என்பதாலும் இனப்படுகொலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் நேரடியாக தலையிடுவதற்கான உரிமையும் கடமைப் பொறுப்பும் சட்டத் தகுதியும் இந்தியாவுக்கு இருக்கிறது என்பதை பிரதமரிடமும் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தியிடமும் வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடமும் பா.ம.க. தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. நேரில் சந்தித்தும் கடிதங்கள் வாயிலாகவும் இதனை வற்புறுத்தியிருப்பதுடன் மக்களவையிலும் பா.ம. க. உறுப்பினர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையை மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

இலங்கைத் தமிழர் இனப்படு கொலையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் நேரடியாகத் தலையிடு வதற்கான உரிமையும் கடமைப் பொறுப்பும் சட்டத் தகுதியும் இந்தியாவுக்கு இருக்கிறது. இந்த உரிமை எப்போதேனும் பயன்படுத்தப்பட்டுள்ளதா? இது பற்றி அமைச்சரவைக் கூட்டத்திலாவது விவாதிக்கப்பட்டிருக்கிறதா?

இல்லை என்றால் தமிழகத்தைச் சேர்ந்த மிகவும் மூத்த அமைச்சரும் நிதித்துறை, உள்துறை போன்ற முதன்மையான பதவிகளை ஏற்ற வரும் அரசின் கொள்கை முடிவுகளை மேற்கொள்ளும் அமைச்சரவைக் குழுக்களில் இடம்பெற்றவருமான சிதம்பரம் இது வரை என்ன செய்துகொண்டிருந்தார்.

கவனம் செலுத்தியது உண்டா?

இலங்கை மீது சீனாவும் பாகிஸ்தானும் ஆதிக்கம் செலுத்தி வருவதால் அதன் மீது செல்வாக்கு செலுத்தக்கூடிய ஆற்றல் இந்தியாவுக்கு இல்லை என்று சிதம்பரம் சொல்லவில்லையா? இதன் மூலம் இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளி யறவுக் கொள்கை முழுத் தோல்வி என்று அவர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளவில்லையா?

இலங்கைத் தமிழர் சிக்கல் வெகு தொலைவில் உள்ள இங்கிலாந்து, கனடா போன்ற நாடுகளின் நாடாளுமன்றங்களில் எல்லாம் வாதிட்டு விவாதிக்கப்படும்போது அண்டை நாடான இந்தியாவின் பாராளுமன்றத்தில் இதை அரசாங்கமோ காங்கிரஸ் கட்சியோ ஏன் முன் வைத்து விவாதிக்கவில்லை? மக்களவையில் வினா நேரத்துக்குப் பிறகு பா.ம.க.உறுப்பினர்கள் மூலமாக இந்தச் சிக்கல் குறுகிய நேரம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும் கூட சிதம்பரம் எங்கே போயிருந்தார்.

வெகு தொலைவில் இருக்கும் அமெரிக்காவில் பாராளுமன்றக் குழு இலங்கைத் தமிழர்களின் மனிதப்பேரழிவு சிக்கல் குறித்து விசாரிக்கும் போது இந்தச் சிக்கல் ஏன் ஒரு போதும் இந்திய பாராளுமன்றத்தின் வெளியுறவுக் குழுவுக்கு கொண்டு செல்லப்பட்டு விவாதிக்கப்படவில்லை.

தொடர்ச்சியாகக் கோரிக்கைகள், மனுக்கள், சட்டப் பேரவைத் தீர்மானங்கள், அனைத்துக் கட்சித் தீர்மானங்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தூதுக்குழுக்கள், முதல் அமைச்சர் தலைமையில் அனைத்துக் கட்சித் தூதுக் குழு இப்படியெல்லாம் முறையிட்டும் கூட இலங்கைத் தமிழர் சிக்கலில் அக்கறை இல்லாமலும ஈடுபாடு இல்லாமலும் இந்திய அரசு அமைதியாக இருந்து வருகிறது.



உண்மையில் அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசும் அதன் படைகளும் நடத்திவரும் இனப் படுகொலைக்கும் இனவெறிப்போருக்கும் இந்திய அரசு ஆதரவு அளித்துவருகிறது என்ற கடுமையான குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன. இலங்கைப் படைகளுக்குப் போர்ப் பயிற்சி அளித்தல், போர்க் கருவிகள் வழங்கிப் பராமரித்தல், ரேடார் இயக்குதல், விமானம் மூலம் வேவு பார்த்துக் கண்காணித்தல், உளவுத் தகவல்களை வழங்குதல், கடற்படை மூலம் முற்றுகை முதலியவை அதில் அடங்கும். இந்திய அரசு இவை எதையும் மறுக்க வில்லை இது பற்றி சிதம்பரம் என்ன சொல்கிறார்?

இப்படியெல்லாம் சிதம்பரத்தை நோக்கி எண்ணற்ற கேள்விகளை எழுப்ப முடியும் இவற்றுக்கெல்லாம் சிதம்பரம் என்ன பதிலளிக்க முடியும்.

இவ்வாறு டாக்டர் ராமதாஸ் அந்த அறிக்கையில் கூறியுள்ளார். (ந-2)

## புலி ஆதரவாளர்களுக்கு மன்னிப்பு வழங்க வேண்டும்

## அமைச்சர் ப.சிதம்பரம் கோரிக்கை

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடவடிக்கை மேற்கொண்ட குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட சகலருக்கும் மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு இந்திய மத்திய உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காரைக் குடியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அப்பாவித் தமிழ் மக்கள் இழப்புகளைத் தவிர்க்கும் வகையில் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் நடந்துகொள்ள வேண்டியது மிகவும் முக்கியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டத் தின் போது ப.சிதம்பரத்திற்கு எதிராக சுலோ கங்கள் எழுப்பப்பட்டதுடன் மரக்கட்டைகள் மேடைக்கு வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

## பிரித்தானிய நாடாளுமன்ற சதுக்கத்தில் மீண்டும் தமிழர் ஆர்ப்பாட்டம்

(லண்டன்)

பிரித்தானிய நாடாளுமன்றத்திற்கு முன்பாகவுள்ள சதுக்கத்தில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்ததைக் கண்டித்து நேற்று மாலை பிரித்தானியாவில் தமிழர்கள் கிளர்ந்தெழுந்து மாபெரும் வீதிமறிப்பு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

பிரித்தானிய பொலிஸார் தமிழர்களை நாடாளுமன்ற சதுக்கத்தில் இருந்து கடந்த சனிக்கிழமை மாலை திடீரென அகற்றியிருந்தனர். இதனால் வீதியில்இரு மருங்கிலும் நின்ற வாறே ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் தமது போராட்டத்தை முன்னெடுத்து வந்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் மாலை திடீரென அப்பகுதியில் சுமார் 8 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் திரண்டு பிரித்தானிய பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தும் தாயகத்தில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் வீதிக்கு குறுக்கே அமர்ந்து கொண்டனர். இதனால் நாடாளுமன்ற சதுக்கத்தைச் சுற்றியுள்ள இரண்டு வீதிகள் ஊடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டதுடன் போக்குவரத்திலும் பெரும் நெரிசல் ஏற்பட்டது.

இதனையடுத்து மேலதிக பொலி ஸார் அங்கு வரவழைக் கப்பட்டு மக் களை அங்கிருந்துஅகற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும் அந்த முயற்சி பலனளிக்காமல் போகவே மீண்டும் நாடாளுமன்ற சதுக் கத்தை தமிழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்து வதற்கு திறந்து விட பொலிஸார் உடன்பட் டனர்.

நாடாளுமன்ற சதுக்கத்தில் ஆகக் கூடுதலாக 400 பேர் மட்டுமே நிற்க வேண்டும் என பொலிஸார் கேட்டுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளையில் சுப்பிமணியம் பரமேஸ்வரன் தனது உண்ணாநிலைப் போராட்டத்தை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றார். (ந-2)

## கூட்டணி குறித்த முடிபு அ.தி.மு.க கையில் தான்

### பா.ஜ.மூத்த தலைவர் அத்வானி பேட்டி

(திருவனந்தபுரம்)

தேர்தலுக்குப் பின் பா.ஜ.வுடன் கூட்டணி வைத்துக்கொள்வதா, வேண்டாமா என்பது குறித்து அ.தி.மு.க தான் முடிவு செய்ய வேண்டும் என பா.ஜ. மூத்த தலைவர் அத்வாணி கூறியுள்ளார். கேரளா திருனந்தபுரத்துக்கு பிரசாரத்திற்கு வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தற்போதுள்ள சூழ்நிலையில் தேர்தலுக்குப் பின் ஏற்படும் சூழ்நிலையை பொறுத்தே அரசு அமைக்க முடியும். 1999 இல் நடந்த லோக்சபா தேர்தலுக்குப் பின் தெலுங்கு தேசம் கட்சி தே.ஜ.கூட்டணியில் இணைந்தது. தேர்தலுக்கு முன் இணையவில்லை. இந்த முறையும் அதேபோல் சில கட்சிகளுடன் கூட்டணி ஏற்படலாம். தேர்தலுக்குப் பின் பா.ஜ. தலைமையிலான அரசுக்கு அ.தி.மு.க ஆதரவுஅளிக்குமா என்பது குறித்து தொடர்ந்து கேட்கப்படுகிறது. பா.ஜ.வுக்கு ஆதரவு அளிப்பதா இல்லையா என்பதை அ.தி. மு.க.தான் முடிவு செய்ய வேண்டும். இந்த விஷ யத்தில் முடிவு எடுக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட கட்சிகளின் கையில் தான் உள்ளது.

இத்தேர்தலில் மூன்றாவது அணி என்பது பொருத்தமற்ற ஒன்றாகவே கருதப்படுகி றது. பா.ஜ.அல்லது காங்கிரஸ் ஆதரவு இல்லாமல் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க முடியாது. தே.ஜ.கூட்டணியில் உள்ள கட்சிகள் தொடர்ந்து அதில் இடம் பிடித்து வருகின்றன. ஆனால் ஐ.மு.கூட்டணியில் பெரும்பாலான கட்சிகள் வெளியேறி விட்டன. மன்மோகன் சிங் பலவீனமான பிரதமர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதிக செல்வாக்கு உள்ள சக்திகள் பிரதமர் அலுவலகத்தில் பிரதமரை பின்னுக்கு தள்ளி விட்டு செயல் படுகின்றன.

பா.ஜ. ஆட்சிக்கு வந்தால் ராமர் கோவில் கட்டப்படும் வெளி நாடு களில் இந்தியர்களால் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்பு பணத்தை திருப்பிக்கொண்டுவர நடவடிக்கை எடுக்கப் படும். காங்கிரசின் தேர்தல் அறிக்கையை பா.ஜ. காபி அடித்து விட்டதாக குற்றம் சாட்டப் படுகிறது.

அப்படி என்றால் இதற்காக காங்கிரஸ் சந்தோஷப்படத்தானே வேண்டும் எதற்காக புகார் கூறுகின்றனர். எனத் தெரியவில்லை. இவ்வாறு அத்வானி கூறினார். பா.ஜ.வுடன் பேச்சு? ஜெ.மறுப்பு தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி தொடர்பாக அ.தி.மு.க. எந்த அரசியல் கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்த வில்லை என அ.தி.முக. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறியுள்ளார். பா.ஜ. பிரதமர் வேட்பாளர் அத்வானி தே.ஜ.கூட்டணியில் இல்லாத கட்சிகளின் ஆதரவுடன் ஐ.மு. கூட்டணியை விட அதிக இடங்களில் வெற்றி பெற்று கூட்டணி ஆட்சி அமைப்போம் இது குறித்து சில கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. குறிப்பாக அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதாவுடன் இவ் விஷயத்தில் பேச்சுவார்த்தை நடக்கிறது. என தெரிவித்திருந்தார் இதை அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா மறுத்துள்ளார்.

அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பா.ஜ.வுடன் தேர்தலுக்கு பிந்தைய கூட்டணி குறித்து நான் பேசி வருவதாக சில பத்திரிகைகளில் செய்தி வெளியாகியுள்ளது. லோக்சபா தேர்தல் தொடர்பாக இ.கம்யூ மா.கம்யூ பா.ம.க. ம.தி.மு. க ஆகிய கட்சிகளுடன் அ.தி.மு.க. கூட்டணி அமைத்துள்ளது.

பா.ஜ.வுடன் தேர்தலுக்குப் பிந் தைய கூட்டணி குறித்து பேசி வருவதாக வரும் தகவல்கள் ஆதாரம் அற்றவை. தேர்தலுக்குப் பிந்தைய கூட்டணி தொடர்பாக அ.தி.மு.க எந்த அரசியல் கட்சியுடனும் பேச்சுவார்த்தை நடத்தவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

(ஓ-2)

# இலங்கையில் தமிழர் 122

## சிங்களவரும் - தமிழரும்: இணைச் சாதனையாளர் .1070 – 1200

### அஞ்ஞாற்றுவர்

முன்னர் கூறப்பட்டது போல, பதினோராம் நூற்றாண்டில் இலங்கையில் தென்னிந்திய வணிக கணங்களும் அவர்களுடன் கூடி இயங்கிய குழுக்களும் பல்வேறு துறைகளில் துரித முயற்சியில் ஈடுபட்டிருந்தன. இக் குழுக்களை எல்லாம் உள்ளடக்கும் ஒரு நிறுவனம் போன்று அஞ்ஞாற்றுவர் என்ற குழு இயங்கியது.

இக் குழுவின் செல்வாக்குப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் உச்சக்கட்டத்தை அடைந்தது. அக் குழுவினருடைய கல்வெட்டுக்கள் பல இடங்களில், குறிப்பாக இலங்கையின் வட பாதியில், விடப்பட்டு இன்று கிடைத்துள்ளன.

அஞ்ஞாற்றுவர் நடமாட்டம் சிறப்பாகத் துறைமுகப் பட்டினங்களிலும் வர்த்தக மையங்களிலும் இடம்பெற்றன எனலாம். இதனால் இத்தகைய இடங்களில் அவர்கள் குடியிருப்புகள் இருந்தன என்று ஊகிக்க லாம்.

அஞ்ஞாற்றுவர் கல்வெட்டுக்கள் இலங்கையில் அனுராதபுரம்,பொலநறுவை மற்றும் பதவியா போன்ற அக்காலத்துப் பெரு நகரங்களில் மட்டுமின்றிப் பரவலாக வாஹல்கட, விஹாரேஹின்ன, புதுமுத்தாவ போன்ற பிற இடங்களிலும் முன்னர் கூறப்பட்டது போல் கிடைத்துள்ளன.

அக்காலத்துப் பெருந்துறைகளாகிய மாதோட்டத்திலும் திருகோணமலையிலும் இருந்த கோயில்கள் முற்றாக அழிக்கப்பட்ட காரணத்தால் அஞ்ஞாற்றுவர் கல்வெட்டுக்கள் இதுவரை அவ்விடங்களில் கிடைக்கவில்லை. எனினும் அங்கும் இவர்கள் ஆதிக்கம் பெற்றிருந்திருப்பர் எனலாம்.

இக் காலப் பகுதியில் தமிழ்நாட்டு வணிக கணங்கள் பெற்றிருந்த ஆதிக்கத்தின் விளைவாகத் தமிழ்மொழி தென் ஆசிய வர்த்தகத்தின் முக்கிய மொழிகளுள் ஒன்றாக விளங்கியது. மேற்கு ஆசியாவிலிருந்து வந்த முஸ்லிம் வர்த்தகர்களும் தென்னிந்தியா மற்றும் இலங்கை ஆகிய இடங்களைச் சேர்ந்த வர்த்தகர்களும் தமிழ்மொழியை ஒரு பொது மொழியாகப் பயன்படுத்தினர். இதனால், வணிக கணங்களுடைய கல்வெட்டுக்கள் மட்டுமன்றி, வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பாக மன்னர் வெளியிட்ட பிரகடனங்கள் போன்ற ஆவணங்கள் கூட இக் காலத்தில் தமிழில் எழுதப்பட்டன.

முதலாம் பராக்கிரமபாகு பிறநாட்டு வர்த்தகர்களுடைய மரக் கலங்கள் சேதமடைந்து, கரைக்கும் கொண்டு வரப்பட்டதும் கடைப்பிடிக்கப்பட வேண்டிய விதிகள் பற்றிப் பிரகடனம் வெளியிட்டபோது அது தமிழில் கல்லிலும் செம்பிலும் எழுதிவைக்கப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது.

இப் பிரகடனம் சிறப்பாக ஊராத் துறைக்கு (ஊர்காவற்றுகைக்கு)க் குதிரை களும் யானைகளும் கொண்டு வந்த மரக்கலங்கள் பற்றியது. இக்காலத்தில் குதிரைகள் பெரும்பாலும் மேற்கு ஆசியாவி லிருந்து கொண்டு வரப்பட்டன. ஆகவே இவ் வர்த்தகத்தில் ஈடுபட்டோர் அஞ்சுவண்ணம் போன்ற முஸ்லிம் வர்த்தகர்களாக இருந்தி ருக்கலாம்.

வணிக கணங்கள் பற்றிய ஆவணங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் வர்த்தகர்கள் பற்றிய தகவல்கள் கிடைத்த போதிலும், சிங்கள வர்த்தகர்கள் பற்றிய தகவல்களைப் பெறுவது கடினம். எனினும் இவர்களும் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் பங்குகொண்டிருப்பர் என்று கொள்ளலாம்.

பாளி வரலாற்றேட்டில் நீர்ப்பாசனத்துக்காகக் கட்டப்பட் வசதிகள் பற்றிய விரிவான தகவல்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டாலும் வர்த்தகம் பற்றிய குறிப்புகளைக் காண்பது அரிது. என்றாலும், ஓரிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல் பயனுடையது.

விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ள முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சி பற்றிய வரலாற்றில் வெளிநாட்டு வர்த்தகத்துக்காக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பற்றியும் அவை கப்பல்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டமை பற்றியும் கூறப்பட்டுள்ளது. அத்துடன், பர்மா நாட்டு மன்னனுக்கு எதிராகப் பராக்கிரமபாகு தன் படையை கப்பல்களில் அனுப்பிய காரணம் பராக்கிரமபாகுவின் வர்த்தகர்களுக்குப் பர்மியமன்னன் தீங்கு இழைத்தமை என்றும் கூறப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து சிங்கள வர்த்தகர்களும் வெளிநாட்டு வர்த்தகத்தில் பங்குகொண்டிருந்தனர் என்று கொள்ள இடமுண்டு.

தென்கிழக்கு ஆசிய வர்த்தகத்தில் இலங்கையில் இருந்து சென்ற சிங்கள வர்த்தகர்களும் பங்குபற்றினர் என்பதற்கு இந்துனீசியாவில் கிடைக்கும் ஜாவக மொழிக் கல்வெட்டுக்கள் தரும் சான்று பயனுடையது. ஜாவாத் தீவின் துறைகளில் காலத்துக்குக் காலம் தங்கியிருந்து வர்த்தகம் நடத்திய வெளிநாட்டு வர்த்தகர்களைப் பற்றிய பட்டியல்கள் இந்துனீசிய கல்வெட்டுக்களில் உள்ளன.

இப் பட்டியல்களில் ஒன்பதாம் நூற் றாண்டளவிலேயே இலங்கை வர்த்தகர்கள் சேர்க்கப்பட்டனர் எனலாம். மத்திய ஜாவாவில் கேது என்னும் இடத்தில் கிடைத்த 833 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்றில் உள்ள பட்டியலில். 'சிங்கள' என்ற பெயர் சிறிது அழிந்த நிலையில் காணப்படுகின்றது. இதன் பின் 927,1021 மற்றும் 1305 ஆகிய ஆண்டுகளுக்குரிய கல்வெட்டுக்க ளில் "சிங்கள' என்ற பெயர் தெளிவாக உள் ளது. இவற்றிலிருந்து இலங்கை வர்த்தகர்கள், சிங்களவரும் பிறரும், ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதினான்காம் நூற்றாண்டுவரை தென்கிழக்கு ஆகிய வர்த்தகத்தில் பங்குபற்றினர் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்தாகின்றது.

அஞ்ஞாற்றுவருடன் கூடியும் சிங்கள வர்த்தகர்கள் செயலாற்றியிருக்கலாம் என்று கொள்ளவும் இடமுண்டு. அஞ்ஞாற்றுவருடைய மெய்க்கீர்த்தியுடன் ஒரேயொரு சிங்கள மொழிக் கல்வெட்டுக் கிடைத்துள்ளது. கவலைக்குரிய வகையில் இத் தனித்துவமுள்ள கல்வெட்டின் உடைந்த ஒரு பாகம் மட்டுமே கிடைத்துள்ளது. நிலைமையை மேலும் கவலைக்குரியதாக்கும் வகையில், இப் பாகத்தில் அஞ்ஞாற்றுவர் மெய்க்கீர்த்தி மட்டுமே இருப்பதால் சிங்கள வர்த்தகர்கள் பற்றியோ கல்வெட்டின் நோக்கம் பற்றியோ அறிய முடிய வில்லை.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

எனினும், அஞ்ஞாற்றுவர் கல்வெட்டு ஒன்று சிங்கள மொழியில் இருப்பதால் சிங்கள வர்த்தகர்கள் அஞ்ஞாற்றுவர் கணத்தில் இருந்திருப்பர். தென்னிந்தியாவில் தமிழர் மற்றும் கன்னடம் போன்ற பல மொழி இனக் குழுக்கள் அஞ்ஞாற்றுவர் கணத்தில் இருந்த படியால், அஞ்ஞாற்றுவர் தம்மை நானாதேசியர் ( பல நாடுகளைச் சேர்ந்தோர்) எனப் பெருமையுடன் வர்ணித்தனர். இப் பின்னணியில் சிங்கள வர்த்த கர்களும் அக் கணத்தில் சேர்ந்து வர்த்தக வளர்ச்சிக்குப் பங்களித்திருப்பர் எனலாம். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

நாங்கள் ஒரு பக்கத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.தேர்வு கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையேயல்ல. செல்வந்தர்கட்கும் வறிய வர்கட்குமிடையில் அல்ல. அது மிகவும் கடுமையான தேர்வு. சுயாதீனத்துக்கும் அடிமைத்தனத்துக்குமிடையேயான தேர்வு. நீதிக்கும் அநீதிக்கும் இடையேயானது. ஈடுபடலுக்கும் ஏனோதானோ என்றிருத்தலுக்கும் இடையில், சரிக்கும் பிழைக்கும் இடையில் தேர்வு ஒபாமா இதில் தன் பேச்சை நிறுத்தினார்.

கூட்டம் அவரையே பார்த்துக் கொண்டு அமைதியாக இருந்தது. சிலர் கைதட்டினர். மற்றும் சிலர் தொடர்ந்து பேசுங்கள் என்று கூச்சல்போட்டனர். கைதட்டல் கூடியது. கூட்டம் ஏமாற்றம் அடைந்தது போலக் காணப்பட்டனர்.

ஒபாமாவுக்கு புலனாகியது தான் அவர்களைக் கவர்ந்து விட்டதென்பது.அவர்களோடு தொடர்பை ஏற்படுத்திவிட்டார். மைக்கை மீண்டும் தூக்கினார். பேசத் தொடங்கினார்.

அப்போது யாரோ தன் கைகளைப் பிடித்து இழுப்பதை உணர்ந்தார். திட்டமிட்டபடி நடந்த சதி அது. அவரே அதன் கர்த்தாவும் . இருவர் வாரித்தூக்கிச் சென்றனர். ஒபாமா அவர்களின் பிடியிலிருந்து தப்ப முயற்சி செய்கிறார். நடிப்பாயினும் ஒபாமாவின் ஒரு பகுதி நடிக்கவில்லை. அது அங்கேயே நின்று நடிக்க அவாவுகிறது. தன் குரல் மக்கள் மத்தியில் விழவும் திரும்பத் தன்னிடம் மக்களின் கைதட்டலாக வரவும் ஆசைப்பட்டார். ஆட்டம் முடிந்தது.

அன்றிரவு விருந்துக்கு றெஜினா வந்திருந்தாள். ஒபாமாவின் பேச்சையிட்டுப் பாராட்டினார். அது குறுகிய பேச்சாக இருந்தாலும் ஒபாமாவின் இதயத்திலிருந்து ஊற்றெடுத்து வெளிப்பட்டதல்லவா? அதை இன்னும் கேட்க வேண்டும் போல் எல்லோருக்கும் இருந்தது என்றாள்.

ஒபாமா குறுக்கிட்டார். இதுதான் தனது கடைசியும் முதலுமான பேச்சு. இனிமேல் ஒபாமா பேசமாட்டார். எனக்கு கறுப்பின மக்க



ளுக்காகப் பேசவேண்டும் என்று இல்லை. ஏனென்றால் தென் ஆபிரிக்க மக்களுக்கு அங்கு நடந்தேறும் கொடு மைகளை இங்கே பேசி எந்தப் பிரயோசனமும் விளையப் போவதில்லை. 'இங்கே பேசும்போது, நான் நன்மையைப் பெறுகிறேன்' கைதட்டல்கள் எனக்குக் கிடைக்கிறது. அவ்வளவு தான். எனக்கு இதில் நம்பிக்கையில்லை என்றார் ஒபாமா.

றெஜினா திகைத்துப்போனாள். "நீ என்னை முட்டாள் ஆக்கிவிட்டாய் நம்பிக்கை வைத்துள்ள மனிதனின் பேச்சென்றல்லவா நினைத்தேன். கறுப்பர் ஒருவர் கறுப்பருக்காக வாழ்கிறார். உண்மையில் நான் ஒரு பேய்ச்சிதான்" என்றாள். அதற்கு " அப்படியல்ல.

நீ உண்மையில் எதையும் நம்புகிறவள். உனக்கு எல்லோரும் நல்லவர்களாகத்தான் தோன்றுவார்கள்" என்று ஒபாமா பதிலளித்தார்.

றெஜினா ''நீ தான் ஏமாறுகிறாய். மற்றை யவர்களையும் ஏமாற்றுகிறாய். உன்னைப் பற்றியே நினைக்கிறாய். பேரணி, பேச்சு, உன்னைப் பற்றி உனக்காகத்தான்.

'மிஸ்ரர் ஒபாமா ஒன்று சொல்லட்டுமா? உனக்காகவல்ல உனது உதவியை எதிர் பார்த்து நிற்கும் மக்களுக்காக. உன்னில் நம்பி தங்கியுள்ள குழந்தைகளுக்காக' ஒபாமாவைப் பார்த்துத் தன் ஆதங்கத்தைக் கொட்டித் தீர்த்தாள். உண்மையை அவருக்கு உணர்த்தினாள்.

அப்போதுதான் றெஜி அந்தப் பக்கம் வந்தாள். அவன் பழைய நினைவுகளை மீட்டான். தாங்கள் நாற்பது மணித்தியாலங்கள் குடித்துக்களித்த கதையைப் பற்றி .. 40 கூறிப் பெருமைப்பட்டான். இதைக் கேட்ட றெஜினா மிரண்டு எழுந்தாள்.

"உங்களுக்கு விளையாட்டு. பரக் நீங்கள் அசுத்தமாக்கியது. அடுத்த நாட் காலையில் அங்கு வந்து துப்புரவு செய்பவள் ஒரு கறுப்புப் பாட்டி. வாழ்நாள் முழுவதம் அதைச் செய்து முதுகு வளைந்துவிட்டது.

இது நீங்கள் செய்தது பரோபகாரமா?" என்று சினந்தவாறு கூறியபடி வாசற்படியைத் தாண்டினாள்.

ஒபாமா செய்வதறியாது தடுமாறினார். "மற்றவர்களைப்பற்றி நீ தீர்ப்புக் கூறுவதற்கு முன் உன்னைப்பற்றி அறிந்துகொள். உனது மாசுவை மற்றவர்களைக் கொண்டு துடைக்காதே.

இத்தனையும் ஒபாமா பல வருடங்களாகக் கேட்டுப்புளித்துப் போன தத்துவங்கள். தனது கற்பனையில் விளைந்த நோவுகள், வெள்ளையர்கள் ஆக்கியுள்ள கற்பனைப் பொறியிலிருந்து தப்ப வேண்டும் என்ற ஆசை.

**ஜம்பொன்**

இவற்றில் ஈடுபட்டுள்ள படியால் மேற் போந்தத்துவங்கள் பற்றிக் கவலைப்பட முடியவில்லை.

கறுப்பின மக்களின் அவல நிலைக்குக்கு யார் காரணம்? வெள்ளையர்கள் தான். ஆனால் இப்போது இது மாறிவிட்டது. காரணம் அவர்களல்ல என்ற வாதம் வந்துவிட்டது. கறுப்பர்கள் தான் காரணம். அவர் களிற் குடிகொண்டுள்ள பயம் தான் காரணம். (தொடரும்)

# வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை க.பொ.த (சா/த) 2008 பெறுபேறுகள்

## ஒரு பார்வை

5ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்து கடின போட்டி மூலம் அனுமதிபெற்ற மீத்திறன் கொண்ட வேம்படி மாணவிகளின் பொதுப் பரீட்சை பெறுபேறுகளை அறியவும், அவை பற்றி பல கோணங்களில் ஆராயவும் பல்துறையினர் ஈடுபாடுகொண்டுள்ளனர். இப் பாடசாலையின் பரீட்சைப்பெறுபேறுகள் இம் மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் குறிப்பாக மகளிர் அபிவிருத்தியில் பெரும் பங்கு வகிக்கின்றது.

2008 க.பொ.த(சா/த) பரீட்சைக்கு மொத்த 194 பேர் தோற்றினர். இவர்களுள் தமிழ் மொழிமூலம் 166 பேரும் ஆங்கில மொழிமூலம் 28பேரும் தோற்றினர். இப் பாடசாலையில் 51 வருடங்களுக்குப் பின்னர் 2003 ஆம் ஆண்டில் ஆங்கில மொழி மூலப் போதனை 6 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டில் சேர்ந்த மாணவிகளே 2008 இல் க.பொ.(சா/த) பரீட்சைக்குத் தோற்றினர். ஆங்கில மொழி மூலப் போதனையை முன்னெடுப்பதில் பல சவால்களை அதிபர், ஆசிரியர்கள் எதிர்கொண்ட பொழுதும், பிரச்சினைகளுக்கு நல்லமுறையில் முகம் கொடுத்து, புதிய பல கற்பித்தல் தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்து மாணவிகளின் கற்றல் செயற்பாட்டை உற்சாகப் படுத்தி வலுப்படுத்தினர். இவர்களது முயற்சிக்கு பெற்றோர் கொடுத்த ஆதரவும், ஊக்கமும் உறுதுணையாக இருந்தது. மாணவிகள் நல்ல பெறுபேற்றையும் பெற்றுள்ளனர். 5A யும் அதற்கும் கூடிய தரத்துடன் சித்தி பெற்ற மாணவி களின் எண்ணிக் கை 123 ஆகும். இது 63.14%மாகும்.

**2008 பரீட்சை பெறுபேறுகள்**
**A சித்தி அடிப்படையில்**
**பின்வருமாறு**

அட்டவணைI

| தரம் | தமிழ்மொழி மூலம் | ஆங்கில மொழி மூலம் | மொத்தம் |
|---|---|---|---|
| 9A | 06 | 05 | 11 |
| 8A | 26 | 05 | 31 |
| 7A | 21 | 02 | 23 |
| 6A | 22 | 04 | 26 |
| 5A | 29 | 03 | 32 |
| 4A | 29 | 05 | 34 |
| 3A | 19 | 02 | 21 |
| 2A | 08 | 02 | 10 |
| 1A | 06 | 00 | 06 |
| | 166 | 50 | 194 |

(தமிழ் மொழி விகிதம் 62.7%ல்), ஆங்கிலமொழி விகிதம் (67.9) சகல பரீட்சார்த்திகளும் குறைந்தது ஒரு A சித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அட்டவணைII பாட அலகுகளின் பெறுபேறுகள் தர அடிப்படையிலும் , எண்ணிக்கையிலும் விகிதத்திலும் 2008,2007,2006 ஆண்டுகளுக்குத் தரப் பட்டுள்ளன. 2008 இல் 219 பேரும் 2007 இல் 219 பேரும்,2006 இல் 232 பேரும் பரீட்சைக்குத் தோற் றியிருந்தனர். 2008 இல் 194பேர் தலா 9 பாடங்களுக்கு தோற்றியிருந்தால் 1746 அலகுகளுக்கு தோற்றி இருக்க வேண்டும். ஒரு பரீட்சார்த்தி தமிழ் இலக்கியப் பாடத்திற்கு தோற்றவில்லை.

மூன்று வருடப் பெறுபேறுகள் பொதுவில் ஒத்த பண்புகளைப் பெற்றிருக்கின்றன. 2008 இல், 2007 இல் பெற்ற A சித்தி விகிதத்திலும் பார்க்க குறைவாக இருப்பினும் B சித்தி விகிதம் 2007 இலும் பார்க்க உயர்வாக இருக்கின்றது. 2008 இல் தமிழ் மொழிமூலம் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளிலும் பார்க்க ஆங்கிலமொழி மூலப் பெறு பேறுகள் உயர்வாக இருக்கின்றன.

இருமொழி (தமிழ்/ ஆங்கிலம்)மூல பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளை ஒப்பிடுமிடத்தில் ஆங்கில மொழி மூலப் பரீட்சார் த்திகள் சற்று சிறப்பாகச் செய்திருக்கின்றனர். இவர்களது சிறந்த பெறுபேறுக்கு இரண்டுகாரணிகள் பங்களித்திருக்க முடியும். கூடிய திறமையான மாணவிகள் ஆங்கிலமொழி மூலம் பயின்றிருக்க வேண்டும். மேலும் இவர்கள் நடுத்தர வகுப்பு குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளை களாக இருந்ததால் குடும்ப அங்கத்தவர்களின் உதவி, ஊக்கத்தை பெற்றிருக்கக்கூடிய சூழ்நிலைகள் இருந்திருக்கும்.

ஆங்கில மொழி மூலம் பரீட்சை எழுதிய மாணவிகளில் ஒரு பரீட்சார்த்தி மாத்திரமே வரலாற்றுப்பாடத்தில் சித்தி பெற வில்லை. வரலாற்றுப்பாடமும் ஆங்கில மொழியில் தான் கற்பிக்கப்பட்டமை கவனிக்கத்தக்கது. தமிழ்/ ஆங்கிலம் இருமொழி வழிப் பெறுபேறுகள் சாதாரண பரம்பல் வகையாக இருக்காது. சார்பான ஒரு பக்கச் சார்பைக் கொண்டதாகும். இப்பரீட்சைப் பெறுபேறுகள் மீத்திறன் மாணவத் தொகுதியில் ஏற்படும் பொதுவான பண்பாகும்.

அட்டவணைII

| தரம் | 2008(194x9) எண்ணிக்கை | 2008 விகிதம் | 2007(219x10) எண்ணிக்கை | 2007 விகிதம் | 2006(232x10) எண்ணிக்கை | 2006 விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| A | 1049 | 60.11 | 1520 | 69.5 | 1385 | 59.7 |
| B | 372 | 21.32 | 257 | 16.3 | 438 | 18.9 |
| C | 235 | 13.47 | 221 | 10.2 | 349 | 15.0 |
| S | 77 | 4.41 | 81 | 3.7 | 137 | 5.9 |
| W | 12 | 0.69 | 07 | 0.3 | 13 | 0.5 |
| | 1745 | 100 | 2186 | 100 | 2320 | 100 |



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD.Durham
முன்னாள் துணைவேந்தர்

அட்டவணை IV இல் பாட ரீதியான பெறுபேறுகள் காட்டப்பட்டுள்ளன. சமயப் பாடங்களுக்குத் தோற்றிய 194 பரீட்சார்த்திகள் யாவரும் A சித்தியைப் பெற்றிருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. இதுபோல சித்திரப் பாடத்திற்கு தேற்றிய 6பேரும் A சித்தி பெற்று இருக்கின்றனர். ஆங்கிலத்திலும், ஆங்கில இலக்கியத்திலும் பெறுபேறுகள் மிகவும் உயர்வாக இருக்கின்றன. 194 பரீட்சார்த்திகளில் ஆங்கிலமொழியில் 9 பேரே சித்தியடையவில்லை. இது போல் ஆங்கில இலக்கியத்தை எடுத்த 34 பரீட்சார்த்திகளில் ஒருவர் மாத்திரமே சித்தியடையவில்லை.

அட்டவணை VI

**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை -க.பொ.த(சா/த) பரீட்சை-2008**

**கூட்டாகதமிழ்/ஆங்கில மொழிகள் மூலமாக**

| பாடங்கள் | தோற்றிய மாணவர்கள் | A | B | C | S | W | சித்தியடைந்த மாணவர்கள் | நூற்று வீதம்% |
|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 181 | 181 (26) | - | - | - | - | 181 (26) | 100% |
| உரோமன் கத்தோலிக்கம் | 11 | 11 (02) | - | - | - | - | 11 (02) | 100% |
| கிறிஸ்தவம் | 02 | 02 | - | - | - | - | 02 | 100% |
| தமிழ்மொழி | 194 | 104 (14) | 73 (14) | 15 | 02 | - | 194 (28) | 100% |
| ஆங்கிலம் | 194 | 50 (23) | 32 (04) | 58 (01) | 45 | 09 | 185 (28) | 95.36% |
| விஞ்ஞானம் | 194 | 81 (15) | 54 (08) | 51 (05) | 08 | - | 194 (28) | 100% |
| கணிதம் | 194 | 139(25) | 33 (03) | 18 | 03 | 01 | 193 (28) | 99.48% |
| வரலாறு | 194 | 132 (19) | 39 (03) | 18 (05) | 14 | 01 (01) | 193 (27) | 99.48% |
| ***1ம் பாடத் தொகுதி*** | | | | | | | | |
| வணிகக் கல்வி | 158 | 60 (16) | 57 (02) | 35 (01) | 06 | - | 158 (19) | 100% |
| புவியியல் | 29 | 13 (06) | 09 (02) | 07 | - | - | 29 (08) | 100% |
| குடியுரிமைக் கல்வி | 07 | 05 (01) | - | - | 02 | - | 07 (01) | 100% |
| ***2ஆம் பாடத்தொகுதி*** | | | | | | | | |
| கர்நாடக சங்கீதம் | 23 | 08 (01) | 13 (01) | 02 | - | - | 23 (02) | 100% |
| சித்திரம் | 06 | 06 | - | - | - | - | 06 | 100% |
| நடனம் | 21 | 18 (03) | 03 | - | - | - | 21 (03) | 100% |
| தமிழ்இலக்கியம் | 18 | 10 (02) | 07 | 01 | - | - | 18 | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 91 | 88 | 02 (01) | 01 | 18 | - | 91 (03) | 100% |
| ஆங்கிலஇலக்கியம் | 34 | 06 (06) | 06 (05) | 14 (06) | 07 (03) | - | 33 (20) | 97.5% |
| ***3ஆம் பாடத்தொகுதி*** | | | | | | | | |
| தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பவியலும் | 69 | 28 (08) | 27 (10) | 14 (09) | - | 01 | 69 (27) | 100% |
| சுகாதாரமும் உடற்கல்வியும் | 122 | 105 (01) | 16 | 01 | - | - | 122 (01) | 100% |
| மனைப்பொருளியல் | 03 | 02 | 01 | - | - | - | 03 | 100% |

( அடைப்புக்குறிக்குள் ஆங்கிலமொழி மூலப் பெறுபேறுகள் காட்டப்பட்டுள்ளன. வரலாற்றைத் தவிர எல்லாப்பாடங்களிலும் 100வீத சித்தி பெறப்பட்டுள்ளது

அட்டவணைIII

| தமிழ்மொழிமூலம் தரம் | எண்ணிக்கை | விகிதம் | ஆங்கிலமொழிமூலம் தரம் | எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|---|---|---|
| A | 881 | 59.00 | A | 168 | 66.67 |
| B | 319 | 21.37 | B | 53 | 21.03 |
| C | 208 | 13.93 | C | 27 | 10.71 |
| S | 74 | 4.96 | S | 03 | 1.91 |
| W | 11 | 0.74 | W | 01 | 0.40 |
| | 1493 | 100 | | 252 | 100 |

ஆங்கில மொழியிலும் ஆங்கில இலக்கியத்திலும் பெற்ற பெறுபேறுகள் மிகவும் பாராட்டிற்குரியன. கணிதத்தில் ஒருவரும், வரலாற்றில் ஒருவரும் சித்தியடையாதது தவிர்த்திருக்கக் கூடியதாகும்.

இப் பாடசாலையில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மீத்திறன் கொண்ட மாணவிகள் கற்பதால் நல்ல பெறுபேறுகள் கிடைப்பதென்று பொதுவில் சொல்லப்படுவது வழக்கம். இந்நிலைமை கல்விச் செயற்பாட்டிற்கு சாதகமான சூழ்நிலையாக இருப்பினும் , இம் மாணவிகள் பாடசாலையில் சேர்ந்து 6 வருடங்களுக்குப் பின்னரே க.பொ.த (சா/த) பரீட்சை எடுக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த 6 ஆண்டுகளில் பாடசாலைக் கல்வி சரியாக முன்னெடுக்கப்படாது விடின் அவர்கள் தங்கள் திறமைகளைக் காட்டியிருக்க முடியாது. இதனால் இந்த 6 ஆண்டுகளும் மாணவிகளை சரியாக வழி நடத்திய அதிபர், மிக சிரத்தையுடன் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பல வழிகளில் உதவிய பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழைய மாணவிகள் சங்கம் ஆகியோரின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடமுடியாது.

நூலகம், கணனி ஆய்வுகூடம், விளையாட்டுமைதானம் மற்றும் வகுப்பறைகள் புதுப்பொலிவு பெற்று வருவதால் வரும் ஆண்டுகளில் கல்விச் செயற்பாடு மேலும் வளர்ச்சிபெற வாய்ப்புண்டு. மாணவிகளின் பரீட்சை பெறுபேறுகளை மேலும் அதிகரிக்க முயற்சிக்க வேண்டும். தகவல் தொடர்பாடலும், தொழில் நுட்பவியல் பாடமும் எடுக்கும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். சர்வதேச ரீதியில் ஊடகக் கல்வி விரிவுபெற்று வருவதால் இப் பாடசாலையிலும் ஊடகக் கல்வி அறிமுகமாக வேண்டிய தேவை இருக்கின்றது. இதனை 2010 இல் அதிபர் அறிமுகம் செய்யவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேறுகளைப் போல க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகள் அமைய வேண்டுமென்பதே அனைவரது எதிர் பார்ப்புகள். நல்ல பெறுபேறுகளைப் பெற்றுத் தந்த வேம்படி மாணவிகள் பாராட்டுக்குரியவர்கள்.

# இலங்கையில் மனிதநேய நிலை குறித்து இணைத் தலைமை நாடுகள் ஆராய்வு

## இரத்தக்களரி ஏற்படாமல் பொதுமக்கள் விடுவிக்கப்பட வேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் மனித நேய நிலைமைகள் குறித்து டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் இணைத்தலைமை நாடுகள் கூடி ஆராய்ந்துள்ளன. இலங்கையின் மோதல்கள் அதிகரித்திருக்கும் நிலையில் இணைத் தலைமை நாடுகள் இரண்டாவது தடவையும் கூடி ஆராய்ந்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் மற்றும் இலங்கை அரசாங்கப் படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்களில் சிக்குண்டிருக்கும் ஆயிரக்கணக்கான பொதுமக்களின் பாதுகாப்புக் குறித்து இணைத்தலைமை நாடுகள் கலந்துரையாடியுள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் 48 மணித்தியாலங்கள் தற்காலிக மோதல் நிறுத்த அறிவிப்பை வரவேற்றிருக்கும் இணைத் தலைமை நாடுகள் இரத்தக் களரியை ஏற்படுத்தாதவாறு பொதுமக்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளன.

மோதல்கள் நடைபெறும் பகுதியில் சிக்குண்டிருக்கும் பொதுமக்கள் சுதந்திரமாக வெளியேறுவதற்கு விடுதலைப் புலிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் இணைத் தலைமை நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

அத்துடன் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கான உணவு மற்றும் மருந்துப்பொருட்களை கப்பல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் காயமடைந்தவர்களை வெளி யேற்றுவதற்கும் இரண்டு தரப்பும் அனுமதிக்க வேண்டும் என இணைத்தலைமை நாடுகள் தெரிவித்துள்ளன.

இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் மத்திய மற்றும் தெற்காசியாவுக்கான அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சட் பௌச்சர் கலந்து கொண்டார். இலங்கையில் போர் நிறுத்தமொன்றைக் கொண்டு வருதற்கு அமெரிக்கா தொடர்ந்தும் முயற்சித்து வரும் நிலையிலேயே இணைத் தலைமை நாடுகளில் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது. (ந-2)

# அம்மா பகவான் ஆன்மீக மையத்தில் அற்புத நிகழ்வு

சுழிபுரம் சந்நிதியில்அமைந்துள்ள ஸ்ரீ அம்மா பகவான்ஆன்மீக மையத்தில் புத்தாண்டை முன்னிட்டு நேற்று மாலை பஜனைக்கான ஒழுங்குகளை செய்து கொண்டிருந்த வேளையில் பகவானின் இதயஸ்தானத்திலிருந்து விபூதி சந்தனப் பவுடர் ஆகியனவும் அம்மாவின் முகம் இதயம் உட்பட பல பகுதிகளில் இருந்த குங்குமமும் சொரிகின்ற அற்புதம் ஏற்பட்டுள்ளதாக சுழி புரம் ஆன்மீக மைய பொறுப்பாளர் தெரிவித் துள்ளார்.

இவ் அற்புத நிகழ்வை அடியார்கள் அனைவரும் கண்டு களிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

# இலங்கை விவகாரம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இடம்பெறாதென மெக்சிக்கோ கூறவில்லை

## பாதுகாப்புச் சபைத் தலைவர் தெரிவிப்பு

(ஜெனிவா)

இலங்கைக்கும் மெக்சிக்கோவுக்கு மிடையில் நடைபெற்ற சந்திப்புத் தொடர்பாக இலங்கை வெளியிட்டிருக்கும் அறிக்கை துல்லியமானது அல்ல என ஐக்கிய நாடுகள் சபைக்கான மெக்சிக்கோத் தூதுவர் குலூட் ஹெலர் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் துல்லியமானது அல்ல. இலங்கையில் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உள்ளது. என்பது பற்றியே நாங்கள் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம் என ஐ.நா பாதுகாப்புச் சபையின் தலைவர் பதவியை வகிக்கும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் மெக்கிச்கோவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கலாநிதி பாலித கோஹண மெக்கிச்கோவின் பிரதி வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட முக்கிய தலைவர்களைச் சந்தித்து ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை விடயம் உள்ளடக்கப்படாது என மெக்சிக்கோ பாலித கோஹணவிடம் உறுதி மொழி வழங்கியதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளி யிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் இந்த அறிக்கையானது துல்லியமானது அல்ல என ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தற்போதைய தலைவரும் ஐ.நா.வுக்கான மெக்சிக்கோ தூதுவருமான ஹெலர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விடயத்தைப் பாதுகாப்புச் சபையில் விவாதிப்பதற்கான பிரேரணையொன்றை முதன் முதலில் மெக்சிக்கோ முன்வைத்திருந்தது. எனினும் இந்தப் பிரேரணைக்கு பிரித்தானியா மற்றும் ரஷ்யா எதிர்ப்புத் தெரிவித்தன.

இதனைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா மெக்சிக்கோ உள்ளிட்ட சில நாடுகள் இணைந்து கொண்டுவந்த மற்றுமொரு பிரேரணையை இலங்கை இராணுவத்தினருக்கு இராணுவ உதவிகளை வழங்கிவரும் சீனா மறுத்திருந்தது.

எனினும் ஐ.நா. பாதுகாப்புச் சபை நிகழ்ச்சி நிரலில் இலங்கை விடயத்தை உள்ளடக்கி பாதுகாப்புச் சபையில் இலங்கை பற்றிக் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பொறுப்பை வழங்கும் மெக்சிக்கோதூதுவர் கூறியிருந்தார். இதன் பின்னணியிலேயே மெக்சிக்கோவுக்கு விளக்கமளிக்கும் நோக்கில் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹண மெக்சிக்கோ சென்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது (ந-2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கொத்து மல்லிக் கீரை

Botanical Name - Coriandrum -Sativum.
Family - Umbelliferae
Engl -Coriander
Sing - Kohamalli

ஒருவேரில் பல கிளைகள் வெடித்து சமார் 20 செ.மீ தூரம் வரைக்கும் வளரும். மஞ்சள் கலந்த பசுமை நிறமுடைய இலையும், தண்டும் மெல்லியன. இலை சுமார் 2 முதல் 3செ.மீ நீளமும் 1 முதல் 2 செ.மீ அகலமும் உடையது. இலை ஓரம் அதிகம் பிளவுகளையுடையது. வெண்ணிறப் பூக்கள் கொத்தாகவுள்ளன.செடி முழுவதும் நல்ல மணமுடையது.இது ஓராண்டு வரை உயிர் வாழும்.

### பயிரிடலும் , இனவிருத்தியும்.

இதை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். கரிசல் மண்ணில் அதிகமாகப் பயிரிடலாம். மண்ணை நன்றாகக் கொத்திக் கிளறி தூளாக்கிக் கொண்டு, விதைகளை பலகை கொண்டு தோய்த்து இரண்டாக உடைத்து ஒரு நாள் நீரில் ஊற வைத்த பின்னர் விதைக்கவும். விதைத்த பின்னர் மணலை மேலே கொஞ்சமாகத் தூவவும். அதன் மேல் வைக்கோலை கொஞ்சமாகப் போட்டு மூடவேண்டும்.

தவறாது தினமும் இரண்டு வேளையும் நீரைத் தெளித்து வர வேண்டும். 3, 4 தினங்களில் முளை கண்டவுடன் வைக்கோலை நீக்கி விட வேண்டும். 7 வாரங்கள் சென்ற பின்பு இலைகளைச் சேகரித்து பயன்படுத்தலாம். 3ம் மாதம் பூத்துக் காய்க்கும். யாழ். மாவட்டத்தில் வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஒரு சில விவசாயிகள் பயிரிட்டு வளர்க்கிறார்கள். ஆனால் கொத்து மல்லிக் கீரை சந்தைப்படுத்தப்படுவதில்லை. நாளாந்தம் பயன்படுத்தக் கூடிய அத்தியாவசியமான கீரையாகும். வீட்டுத் தோட்டங்களிலும் மேற் கூறியவாறு பயிரிட்டு பயன் பெறலாம்.

### 100 கிராம் கொத்து மல்லிக் கீரையிலுள்ள சத்துக்கள்.

புரதம்-3.3கி, கொழுப்பு-0.6கி, நார்ப் பொருள்-1.2 கி, காபோவைதரேற்று-6.3 கி, கல்சியம்-184மி.கி, பொஸ்பரஸ்-71மி.கி, இரும்பு-18.5மி.கி, தயமின்-0.05மி.கி, உயிர்ச்சத்து-C 135 மி.கி, மகனீசியம்-64 மி.கி, சோடியம்-58.3 மி.கி, பொட்டாசியம்-256 மி.கி, கரோட்டீன் 6918 மைக்ரோ கிராம்,உயிர்ச் சத்து A 75 மி.கி.

### மருத்துவப் பயன்கள்.

◆ இலையை தூள்களாக அரிந்து மோரில் போட்டு கோடை காலத்தில் அருந்தினால் உடற் சூடு தணியும், உடல் குளிர்ச்சி அடையும்.

◆ ஒரு டம்ளர் மோரில் 1 அல்லது 2 தேக்கரண்டி கொத்து மல்லி இலைச் சாற்றை கலக்கி அருந்த வாயில் மிகு உமிழ் நீர் சுரத்தல், வாய்க் கசப்பு, வாந்தி உண்டாதல் போன்ற உணர்ச்சி நீங்கி நல்ல பசியுண்டாகும். மூல நோயிற்கும் சிறந்த நிவாரணியாகும்.

◆ பச்சையாகவே வாயில் இலையை



போட்டு மென்று தின்னலாம். இதனால் வாய்த் துர்நாற்றம் போகும்.

◆ வேகலைத்த பருப்பு, தேங்காயுடன் கொத்த மல்லிக் கீரையை சேர்த்தரைத்து துவையலை நெய் சேர்த்து சாதத்துடன் சேர்ந்து உண்டுவர நாக்குப் புண் , வயிற்றுப் புண், வாய்ப் புண் நீங்கும். வாயுக் கோளாறுகளும் தீரும்.

◆ முகப் பரு, சிறு கட்டிகள் முதலியவை நீங்குவதற்கு கொத்துமல்லிஇலைச் சாற்றுடன் மஞ்சள் தூளைக் கலக்கி குழைத்து இரவில் படுக்கு முன் பூசி வர வேண்டும். முகத்தின் தோல் மென்மையாகும்.

◆ 50கிராம் தழைச் சாற்றில் 200 மி.லீ பசுப்பால் கலந்து போதிய சர்க்கரை சேர்த்து, காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர வேண்டும். நரம்புகள் பலப்படும். இரத்தத்தை விருத்தி செய்யும்.

◆ கொத்து மல்லி இலைச் சாற்றோடு தேனும், பாலும் கலந்து இரவு உணவுக்குப் பின் சாப்பிட்டுத் தூங்கினால் இரத்தச் சூடு தனியும்.

◆ கொத்து மல்லி இலை, இஞ்சி இரண்டையும் சம அளவு எடுத்து, அரைத்து அதற்கு தேவையானளவு உப்பு, எலும் மிச்சம் பழச் சாறு, சேர்த்து சாதத்தோடு உண்ண வேண்டும். இதனால் வயிற்றுப் பிசம் , அஜீரணம் போன்ற வயிற்றுக் கோளாறுகள் அகலும். தாராளமாக சிறுநீர் வெளிப்படும்.

◆ கொத்து மல்லித் தழையை ஒரு கைப்பிடியளவு எடுத்து தினசரிகாலையில் வெறும் வயிற்றில் தின்று வர வேண்டும். இப்படி 40 நாட்கள் சாப்பிட்டு வந்தால், தாது பெருக்கெடுக்கும். கண் குளிர்ச்சிபெற்று பார்வை சுகப்படும். உடலில் சுறுசுறுப்பு ஏற்படும். வெறும் தழையை மட் டும் உண்ண முடியாதவர்கள் கற்கண்டு சேர்த்துக் கொள்ளலாம்.

◆ இதன் தழையை ஆமணக்கெண்ணையில் வதக்கி வீக்கம், கட்டிகளுக்கு கட்டி வந்தால், வீக்கம் வடியும், கட்டி யும் பழுத்துடையும்.

### மல்லித்தழை துவையல்

### தேவையான பொருட்கள்

மல்லித்தழை-1 பிடி, உழுந்து-2தேக் கரண்டி, இஞ்சி-1 துண்டு, மிளகு-10, நெய்-1தேக்கரண்டி, தேங்காய்-சிறிதளவு, புளி-சிறிதளவு, பெரு ங்காயம்-1 துண்டு, சீரகம்-சிறிதளவு.

மல்லித்தழை பழுப்பு இலைகளை நீக்கி விட்டு இலைகளை எடுத்து சுத்தம்செய்து வைக்கவும் உழுந்து, இஞ்சி, புளி, பெருங்காயம், மிளகு, ஆகியவற்றை நெய்யில் வறுத்து வதக்கி தேங்காய்த் துருவல் , மல்லித் தழை ஆகியவற்றைச் சேர்த்து மை போல் அரைக்க வேண்டும்.

அதன் பின் சீரகம் சேர்த்து தாளித்து எடுத்து கொள்ளவும். இதனைத் தொடர்ந்து வாரத்திற்கு 3, 4நாட்கள் சாப்பிட்டு வந்தால் 3மாதத்தில் உடலுக்குத் தேவையான இரத்தம் கிடைக்கம். உடல் வலிமையும், தாது பலமும் உண்டாகும். ◆◆◆◆◆

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

# வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)


யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகுட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி(A.R.V) நாளை வியாழக்கிழமை காலை9.30 மணி முதல் 11.30 மணி வரை தொடர்மாடி சன சமூக நிலையத்திலும் பிற்பகல் 1.30 மணி முதல் 3.30மணிவரை சென்றோக் சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்குமேற்படி தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக் கொண்டுள்ளார். (2)

# புத்தாண்டில் உங்கள்

# சித்திரை மாதப் பலன்

## கடகம்



புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம் ஆயிலியம் வரை

**மற்றவர்கள் மனதில் இடம்பிடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் கடக ராசி நேயர்களே!**

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஏப்ரல் முழுவதும் இனிய பலன்கள் ஏற்படும் விதத்திலும் அதன் பின் இடமாற்றங்களால் இனிய மாற்றம் வரும் விதத்திலும் இருக்கின்றன. உலா வரும் கிரக நிலைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாற்றத்தை உருவாக்கும் .

அந்த அடிப்படையில் மாதத் தொடக்கத்தில் குரு உங்கள் ராசியைப் பார்க்கிறார் மே மாதம் பிறந்ததும் மேலே சென்று கும்பத்தை அடைகிறார். எட்டாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது எதிலும் விழிப்புணர்ச்சி காட்டுவது தானே நல்லது. பொருளாதார மேம்பாடு கருதி எடுத்த.புது முயற்சிகளை தள்ளி வைக்கலாம். அருளாளர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளலாம். அலுவலகத்திலும் வீட்டிலும் அருகிலிருப்பவர்களை அனுசரித்துச் செல்லலாம்.

உருவாகும் பிரச்சினைகள் ஒவ்வொன்றும் தீர குருவாக இருப்பவர்களிடம் ஆலோசனைகளைப் பெறுவது நல்லது. 4 11 க்கு அதிபதியும் 7 8 க்கு அதிபதியான இரண்டு கிரகங்களும் இம்மாதத்தில் வக்ர கதியில் இயங்குகின்றன.

எனவே திடீர் திடீரென முடிவெடுப்பதை தவிர்ப்பது நல்லது. திரு மண வாய்ப்புகளை உடனடியாக பரிசீலனை செய்வதும் நல்லது. சுய ஜாதகத்தில் சுக்ரன் மற்றும் சனி ஆகிய கிரகங்களின் சார பலமறிந்து தல வழிபாடுகளை மேற்கொண்டால் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி பெற இயலும்.

சுக்ரன் உங்கள் ராசிக்கு சுகஸ்தானத்திற்கும் லாபஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங்குகிறார். அதே சமயம் அவர் உங்கள் ராசிக்கு பாவியாகவும் விளங்குகிறார். எனவே அதன் நீச காலத்தில் உங்களுக்கு நன்மைகளே அதிகரிக்கும் குறிப்பாக ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும் கொடுத்த பாக்கிகள் வசூலாகவில்லையே என்று ஏங்கியவர்கள் பணவரவு கண்டு ஆச்சரியப்படுவர். குடும்பத்தில் குதூகலங்கள் தரும் சம்பவம் நடைபெறும்.

எட்டில் குரு வந்தால் எதிர்பார்த்த மாற்றம் வரும் என்பது முன்னோர் வாக்கு அதிசாரமாக குரு மே 1ஆம் திகதி முதல் அஷ்டமத்தில் சஞ்சரிக்கப்போகிறார்.

இதன் விளைவாக திடீர் இடமாற்றங்கள் ஊர் மாற்றங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம் தன்னம்பிக்கையை தளர்த்திக் கொள்ளாமல் பார்த்துக்கொள்வது நல்லது. நண்பர்களுக்கு இரக்கப்பட்டு உதவி செய்தாலும் நன்றி காட்ட மாட்டார்கள். கூட்டாளிகள் பிரியலாம். குடும்பச் சுமை கூடும் வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இம் மாதம் முழுவதும் சனி சிம்மத்தில் வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கிறார் எனவே ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. கொடுத்த வாக்கை ஒரு சில சமயங்களில் காப்பாற்ற இயலாமல் போகலாம். வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வதால் மன வருத்தம் நீங்கும் பெரியோர்களை கலந்து ஆலோசித்துச் செய்தால் பிரச்சினைகள் தீரும்.

இம்மாதம் தென்முகக் கடவுளை இம் முகத்தோடு வழிபாடு செய்யுங்கள் மகத்துவம் பெருகும்.

## சிம்மம்



மகம், பூரம், உத்ரம் முதலாம் பாதம் வரை

**பொது நலத்தில் அதிக ஆர்வம் காட்டும் சிம்ம ராசி நேயர்களே !**

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் சூரியன் தனாதிபதி புதனுடன் இணைந்து சஞ்சரிப்பதால் வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் என்றே சொல்லலாம். இருப்பினும் ஜென்மச்சனியின் வக்ர இயக்கம் திடீர் பிரச்சினைகளை உருவாக்கி விடலாம். விரயங்கள் கூடாதிருக்கவும் வீண் பழிகளுக்கு ஆளாகாதிருக்கவும் விழிப்புணச்சியோடு செயல்படுவது நல்லது. மாதத்தொடக்கத்தில் 8க்கு அதிபதி குரு நீசம் பெறுகிறார். அட்டமத்தில் செவ்வாய் சஞ்சரிக்கிறார் எனவே வாகனங்களில் செல்லும் பொழுது கவனமுடன் செல்வது நல்லது. இடமாற்றம், ஊர்மாற்றம், நாடு மாற்றங்கள் திடீரென ஒரு சிலருக்கு வந்து சேரலாம். சுய ஜாதகத்தில் சனி வக்ர கதியில் இயங்கு பவர்களுக்கும், இரண்டா வது சுற்று நடப்பவர்களுக்கும் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது.

வக்ர சுக்ரனின் இயக்கமும், தொழிலில் பங்குதாரர்களின் ஒத்துழைப்புக்களை குறைக்கலாம். எனவே இம் மாதத்தில் எதை யும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. அசதியும், சோர்வும் அதிகரிக்கும். அலைச்சல் மூலமே ஆதாயத்தைப் பெற முடியும். காகத்திற்கு எள் கலந்து சோறு வைப்பதன் மூலமும், சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதன் மூலமும் சங்கடங்களிலிருந்து விடுபட இயலும். கேது பன்னிரெண்டில் சஞ்சரிப்பதால் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பயணங்களுக்காகவே ஒரு தொகையைச் செலவிட வேண்டிய சூழ் நிலை உருவாகலாம்.

3, 10-க்கு அதிபதியான சுக்ரன் ஏப்ரல் 14.4.2009 முதல் ஏப்ரல் 21.4.2009 வரை மீன ராசியில் வக்ரம் பெறுகிறார். எனவே உடன்பிறப்புக்களை அனுசரித்துச் சென்றால் தான் உதவிகளைப் பெற முடியும் தொழில் பங்குதாரர்களால் தொல்லைகள் ஏற்படலாம். புதிய பங்குதாரர்களை சேர்க்கும் பொழுது யோசித்து ஏற்றுக்கொள்வது நல்லது. பெண்வழி பிரச்சினைகள் தலை தூக்கலாம். வியாபார விரோதங்கள் விலக குரு வழிப்பாட்டை மேற்கொள்வது நல்லது. அலுவலகத்தில் பணிபுரிபவர்களால், மேலதிகாரிகளால் தொல்லைகள் உருவாகலாம்.

மே முதலாம் திகதி முதல் கும்ப ராசியில் குரு அதிசாரீமாக சஞ்சரிக்கப் போகிறார். அதன் பார்வை உங்கள் ராசியில் பதியப் போவதால் துணையாக இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். தொகை கேட்ட இடத்திலிருந்து கிடைக்கும் திருமண வாய்ப்புகை கூடி வரும் தெய்வீக சம்பந்த மான காரியங்களில் முழுமையாக ஈடுபடுவீர்கள். கடந்த சில மாதங்களாக நடைபெறாத சில காரியங்கள் துரிதமாக நடைபெறத் தொடங்கும். வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

ஜென்மச் சனி வக்ரம் பெறும் பொழுது முன்கோபத்தால் பல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடலாம். எணவே கோபத்தை குறைத்துக்கொள்வது நல்லது இம்மாதம் முழுவதும் சனியின் வக்ர இயக்கம் இருப்பதால் எதிரிகளின் பலம் கூடும் என்பதை அறிந்து கொள்ளுங்கள் முன்னெச்சரிக்கையோடு நடந்து கொண்டால் முன் னேற்றம் காணலாம்.

இம்மாதம் வளர்ச்சியில் பாதிப்புகள் ஏற்டாமலிருக்கவும் வாய்ப்புகள் வாயில் கதவைத் தட்டவும் முருகப்பெருமானை முழுமையாக வழிபட்டு வாருங்கள் செய்வாய் வழிபாடும் செழிப்பை வழங்கும்.

## கன்னி



உத்தரம் 2,3, 4 பாதங்கள் அத் தம் சித்திரை 1, 2 பாதங்கள் வரை

**நிதானத்தோடு செய்தால் தான் நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று சொல்லும் கன்னி ராசி நேயர்களே!**

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது தனாதிபதி வக்ரம் பெற்றும் விரயாதிபதி உச்சம் பெற்றும் மாதம் தொடங்குவதால் வரவு வருவதற்கு முன்னரே செலவுகள் காத்துக் கொண்டிருக்கும் ஒரு தடவை செய்வேண்டிய வேலையை இரு தடவை செய்ய வேண்டிய சூழ் நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம். மாற் றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை கூடும்.

சோகங்களை சுகங்களாக மாற்றிக் கொள் வதற்கு வழிபாடு ஒன்று தான் வழி காட்டியாக யிருக்கும் அந்த அடிப்படையில் கன்னி ராசிக்காரர்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேற நவகிரக ப்ரீதி செய்வது நல்லது .குரு 4 , 7 க்கும் அதிபதியாக நீசம் பெறுவது யோகம் தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வலிமை இழக்கும் பொழுது நல்ல பலன்களை அள்ளிக் கொடுக்கும்.

அந்த அடிப்படையில் குருவின் பார்வையும உங்கள் ராசியில் பதிவதால் குழப்பங்கள் அகலும் என்றாலும் வக்ரச் சுக்ரனின் பார்வையும் இருப்பதால் திடீர்

திடீரென மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். திட்டமிட்ட காரியங்களை திடடமிட்டபடி நடத்த இயலுமா? என்பது சந்தேகம் தான். குறிப்பாக புதியவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைப்பது அவ்வளவு நல்லதல்ல.

2,9 க்கு அதிபதியான சுக்ரன் ஏப்ரல் 14 ஆம் திகதி முதல் ஏப்ரல் 21 ஆம் திகதி வரை மீனத்தில் வக்ரம் பெறுகிறார். இதன் விளைவாக யாருக்கும் பணப் பொறுப்புகள் சொல்வதை தவிப்பது நல்லது. பக்க பலமாக இருப்பவர்கள் சில சிக்கல்களை உருவாக்குவர். குடும்த்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமலிருக்க ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தங்கம், வெள்ளி விற்கும் சூழ்நிலை அல்லது ஆபரணங்கள் அடகு வைத்து பணம் வாங்கும் சூழ் நிலை ஒரு சிலருக்கு உருவாகலாம்.

ஏழரைச்சனி விலகும் வரை சற்று பொறுமையை கடைப் பிடித்தால் பெருமைகள் வந்து சேரும்.

கும்பத்தில் குரு மே 1 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, எதிரிகள் விலகுவர். ஏமாற்றங்களிலிருந்து விடுபடுவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். மருத்துவ செலவுகள் குறையும். மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வெளிநாட்டிலிருந்து வந்து சேரலாம்.

உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் வருவதை தவிர்க்க முடியாது. கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். குரு வின் பார்வை குடும்ப ஸ்தானத்தில் பதிவதால் மங்கல ஓசைக் கேட்பதற்கான அறிகுறி தோன்றும். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேருவர். குருவை வழிபடுவதன் மூலம் குழப்பங்களில் இருந்து விடுபட இயலும்.

பன்னிரெண்டாமிடத்தில் சனி வக்ரம் பெற்று இம் மாதம் முழுவதும் சஞ்சரிக்கிறார். வாகனத் திருத்தச் செலவுகள் அதிகரிக்கும். வாகன மாற்றம் செய்ய உகந்த நேரமிது. வீடு வாங்கும் முயற்சியிலும் ஆர்வம் காட்டுவீர்கள்.

இம் மாதம் துர்க்கை வழிபாட்டில் கவனம் செலுத்துங்கள். பக் பலமாக இருப்பவர்கள் உங்களை விட்டு விலகாமல் இருப்பர். பணத்தேவைகளும் பூர்த்தியாகும்.

(தொடரும்)




உலக சமூக பணித்தினம் அண்மையில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி மங்கள விளக்கேற்றுவதையும் ,வைத்திய கலாநிதி முல்லை, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட சமூக சேவை உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : அலுவலக செய்தியாளர்)

சமாதானம் செய்து வைப்பவனுக்கு மூன்றில் இரண்டு பங்கு உதை கிடைக்கும்.

*- யூக்கோஸ்லாவியா*

வலம்புரி

## இலங்கை அரசுக்கு நோர்வே என்ன கறிவேப்பிலையா?

இலங்கை இன விவகாரத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவதில் நோர்வே ஆற்றிய வகிபங்கு அளப்பரியது.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து அனுசரணைப் பணியை மேற்கொள்ளுமாறு நோர்வே அரசுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நோர்வேயின் அனுசரணைப் பணியை இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்டிருந்தன.

இருதரப்பின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நோர்வே, இலங்கையில் மனித அழிவுகளையும், யுத்த செலவுகளையும் தடுத்து இந்த நாட்டை அமைதி நிறைந்த நாடாக மாற்ற உதவ வேண்டுமென விசுவாசமாக எண்ணியது.

உலக நாடுகளில் அமைதியான -நல்ல நாடு என்ற புகழோடு இருக்கக் கூடிய நோர்வே, யுத்தத்தால் அழிந்து கொண்டிருக்கும் இலங்கையை நல்வழிப்படுத்த முற்பட்டது.

சுருங்கக் கூறின் கசிப்புக் காய்ச்சுபவர்களை திருத்தி அவர்களுக்கு நல்ல வழிகாட்ட முனைந்த ஒரு குழுமம் போல நோர்வேயும் இலங்கையைத் திருத்தி இன ஒற்றுமையை ஏற்படுத்தி சாந்தியும், சமாதானமும், சுபீட்சமும் ஏற்பட முற்பட்டது.

ஆனால் பாவம் நோர்வே கசிப்புக் காய்ச்சுபவர்களை எங்ஙனம் திருத்த முடியாதோ -அவர்களால் எத்துணை ஆபத்து வருமோ அந்த விபரீதத்தை நோர்வே சந்தித்துக் கொண்டது.

நோர்வேயின் முயற்சியால் 2002ஆம் ஆண்டு அரசு -புலிகள் யுத்த நிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்டதால் நாட்டில் தற்காலிக அமைதி ஏற்பட்டது. மக்கள் ஆறுதலடைந்தனர்.

அரசு -புலிகள் ஆறு தடவைகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தை தோல்வியில் முடிபடைந்தது. இதற்கு நோர்வே என்ன செய்ய முடியும்?

பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இரு தரப்பும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்திருக்க வேண்டும். அவ்வாறு வரவில்லையாயின் அது பேச்சுவார்த்தையில் ஈடுபட்டவர்களின் தவறேயன்றி அந்தப் பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாக இருந்த நோர்வே அல்ல.

எனினும் இலங்கை அரசு நோர்வேயை பல தடவைகள் தாக்கிப் பேசியுள்ளது. குறிப்பாக அரசுடன் இணைந்து செயற்படும் விமல் வீரவன்ச, ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய போன்றவை நோர்வேயைத் தூற்றின.

இப்போது அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை விலக்கியதாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

ஆக கறியின் சுவைக்காக கறிவேப்பிலையை பயன்படுத்துவதும், பின்னர் அதனை தூக்கி எறிவதும் போல, இலங்கை அரசும் நோர்வேயை தூக்கி எறிந்துள்ளது.

இதன் விளைவுகளை காலம்தான் உணர வைக்கும்.

# தமிழ் நாட்டில் 100 பெண்கள் இணைந்து ஈழத்தமிழருக்கு ஆதரவாக போராட்டம்

(சென்னை)

ஈழத்தில் பாதிக்கப்பட்டுள்ள பெண்களையும் குழந்தைகளையும் மக்களையும் காக்குமாறு கோரி தமிழகம் முழுவதிலும் இருக்கும் பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த நூறு பெண்கள் சென்னையில் நேற்று இரண்டாவது நாளாக உண்ணாநிலைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பேராசிரியர் சரஸ்வதி தலைமையில் நூறு பெண்கள் முத்துக்குமாரின் உடலம் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த கொளத்தூரில் காலவரையற்ற உண்ணாநிலைப் போராட்டத்தினை தொடங்கியிருக்கின்றனர்.

இதில் மாணவிகள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், உழைக்கும் பெண்கள் உள்ளிட்ட பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தை தொடங்கியபோது பொலிஸார் அவர்களின் போராட்டத்தை தொடர விடாமல் தடுத்ததாகத் தெரிகிறது என தெரிவிக்கப்பட்டது.

பலத்த போராட்டத்திற்கு பின்னர் மாலை 6 மணிவரை அங்கு அமர பொலிஸார் அனுமதியளித்தனர். மாலை 6 மணிக்குப் பின்னர், ஒரு தொண்டு நிறுவனத்திற்கு சொந்தமான ஒரு கட்டிடத்தில் தற்காலிகமாக இடம்பெயர்ந்த போராட்டக்குழுவினர், அங்கு தமது உண்ணாநிலைப் போராட்டத்தை நேற்றும் இரண்டாவது நாளாக தொடர்கின்றனர்.

எந்தக் குறிப்பிட்ட அரசியல் கட்சி அல்லது அமைப்பின் சார்பின்றி பெண்கள் மட்டுமே முன்னெடுத்துள்ள இப்போராட்டம் போரினால் அதிகம் பாதிப்புக்குள்ளாவது பெண்கள் என்ற அடிப்படையில், சோனியாவே ! இலங்கையில் நடைபெறும் இன அழிப்புப் போரை உடனடியாக நிறுத்து என்ற கோரிக்கையை முன்வைத்து இப்போராட்டத்தை இரண்டாவது நாளாகவும் நடத்தி வருகின்றனர். (ச-5)

# முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஐ.நா. பணியாளர்களை விடுவிக்க கோரிக்கை

(நியூயோர்க்)

மோதல் பிரதேசங்களில் பணியாற்றும் பொருட்டுதற்காலிக முகாம்களில் அரசாங் கம் தடுத்து வைத்துள்ள தமது பணியாளர்களை விடுவிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை கோரியுள்ளது.

தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள தமது பணியாளர்களும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்களும் அங்கிருந்து வெளியேறாத வகையில் அரசாங்கம் தடுத்து வைத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொது செயலரின் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள் விடுவிக்கப்படும் பட்சத்தில், அவர்கள் தமது தொண்டு பணிகளை தொடரக் கூடு மானதாக இருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திடம் தொண்டு பணியாளர்களின் நடமாடும் சுதந்திரத்தினை உறுதி செய்யுமாறு ஏற்கனவே ஐக்கிய நாடுகள் சபை கோரியிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அவர்களின் நடமாட்ட சுதந்திரத்தை உறுதி செய்து பணியாளர் களை விடுவிப்பதாக அரசாங்கம் உறுதியளித்திருந்த போதும் இதுவரையிலும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# தென்னாபிரிக்காவில் ஐந்தாவது நாளாகத் தொடரும் ஈழவேந்தனின் உண்ணா விரதப் போராட்டம்

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் தென்னாபிரிக்காவில் தனது உண்ணா நோன்பை 5ஆவது நாளாகத்தொடர்கின்றார். அவர் தன்னுடைய கோரிக்கைகளை சர்வதேச சமூகம் செவி மடுக்கும் வரைக்கும் தன்னுடைய முயற்சியை கைவிடப்போவதில்லை எனக் குறிப்பிட்டார்.

தென்னாபிரிக்க மண் சுதந்திரப் போராட்டம் விளைந்த மண் அதனாலேயே தென்னாபிரிக்க சமூகத்திலும் தென்னாபிரிக்க அரசாங்கத்திலும் தனக்கு நம்பிக்கை இருக்கின்றது என 5ஆவது நாளாக நீராகாரம் மட்டும் அருந்திக்கொண்டு தனது உண்ணா நோன்பைத் தொடர்கின்றார்.

அவர் தென்னாபிரிக்கா அரசாங்கத்திடம் இருந்து தன்னுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவு உறுதி மொழி கிடைக்கும் என எதிர்பார்ப்பதுடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களின் ஆதரவைத்தொடர்ந்து இவ்வாறான உறுதி மொழி மிக விரைவில் கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்தார். அவர் தென்னாபிரிக்க அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் முன் வைத்த கோரிக்கைகளாவன.

அனைத்துலக சமூகம் இலங்கையில் உடனடியான ஒரு நிரந்தர யுத்த நிறுத்தத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சர்வதேச மனிதாபிமான அமைப்புகளின் மேற்பார்வையின் கீழ் உதவிகள் தமிழ் மக்களைச் சென்றடைய வேண்டும்.

தடுப்பு முகாம்களுக்கு ஊடகம் மற்றும் அனைத்து அமைப்புகள் நுழைய அனுமதிக்கப்பட வேண்டும்.

தமிழீழவிடுதலைப்புலிகளுடன் பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும்.

ஈழவேந்தன் மாரியம்மன் கோவிலில் கூடியிருந்த 3 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் மத்தியில் உரையாற்றினார்.

அங்கு கொசாட்டு அமைப்பின் தலைவர் சிடும்மோ டலாமனி புலனாய்வுத்துறை அமைச்சர் சியாம்பொங்க சிவாலா மற்றும் தொலைத் தொடர்பாடல் பிரதியமைச்சர் றோயல் படையாச்சி போன்ற அரசியல் பிரமுகர்களும் கூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-2)

## வன்னியில் போர் நிறுத்தம் கோரி சுவிஸில் சாகும் வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

ஐந்து அம்சக்கோரிக்கையை முன்வைத்து பேர்ண் வெளிவிவகார அமைச்சின் அலுவலக முன்பாக காலவரையற்ற நீர் ஆகாரம் இல்லாமல் தொடர்ச்சியாக உண்ணாநிலைப் போராட்டம் முன் எடுக்கப்படவுள்ளது.

பின்வரும் கோரிக்கைகளை சர்வதேச சமூகத்துக்கும் குறிப்பாகசுவிற்சர்லாந்து அரசுக்குமுன்வைத்து நீராகாரம் இன்றி சாகும் வரை உண்ணா விரதத்தை மேற் கொள்ள முடிவு செய்துள்ளதாக சுவிஸ். தமிழர் பேரவையின் இணைப்பாளர் கிருஷ்ணாஅம்பலவாணர் தெரிவித்துள்ளார்.

- வன்னியில் தொடரும் இன அழிப்புப் போரை உடன் முடிவுக்குக் கொண்டு வருவதற் கான சுவிஸ் அரசின் நேரடித் தலை யீடு
- வன்னியில் அல்லலுறும் மக்களுக்கு நேரடி மருந்து மற்றும் நிவாரண உதவி
- இலங்கை அரசின் தமிழ் மக்கள் மீதான தாக்குதலைத் தடுக்க ஐ.நா பாதுகாப்புச் சபையில் விசேட விவாதத்துக்கு முயற்சி
- பிரிந்து செல்வதா இல்லையா என ஈழத் தமிழரின் கருத்தறிய ஐ.நா தலைமையிலான சர்வசன வாக்கெடுப்பு
- இவை எதுவும் சாத்தியமில்லாத விடத்து தமிழரின் சுய நிர்ணய உரிமையை சுவிஸ் அரசு உட்பட அனைத்துலக சமூகம் அங்கீகரித்தல். (ஓ-2)

## சுவாமி விவேகானந்தரின் வீர முரசு தொண்டு



வழிபடுவதற்குரிய (பூஜைக்குரிய) ஒரே கடவுள் மனித உடலிலுள்ள மனித ஆன்மாவே. எல்லா விலங்குகளும் கோயில்களே என்பது உண்மைதான். ஆனால் மனிதனோ அனைத்திலும் உயர்ந்த கோயில் .

தினமும் நம் கண்முன்னே கீழ் நோக்கி சென்று கொண்டிருக்கும் முப்பது கோடி மக்களைக் கடைத்தேற்றும் பொருட்டு உங்கள் வாழ்நாள் முழுவதையும் ஈடுபடுத் தக் கங்கணம் கட்டிக்கொள்க . யாருடைய நெஞ்சு ஏழை மக்களுக்காகத் துயரத்தில் அழுமோ அவனையே நான் மகாத்மா என்பேன் அன்றேல் அவன் துராத்மாவே.

இலட்சக்கணக்காக மக்கள் பசியாலும் அறியாமையாலும் உழலும் வரை அவர்களுடைய செலவில் கல்வி கற்றும்,அவர்களை ஒரு சிறிதும் கவணிக்காத ஒவ்வொரு மனிதனையும் நான் துரோகி என்பேன்.


# வேலை வாய்ப்புகளை அள்ளித்தரும் பன்னாட்டு உறவுகள் துறை



சர்வதேச உறவுகள் (International relations) படிப்பை பலரும் அரசியல் அறிவியல் படிப்போடு சேர்த்துக் குழப்பிக் கொள்கின்றனர்.

ஆனால், ஐ.ஆர். எனப்படும் இத்துறை பொருளாதாரம், வரலாறு, சட்டம், தத்துவவியல்,புவியியல், சமூகவியல், மானுடவியல் , உளவியல்,கலாசாரவியல், உலக மயமாக்கல், மானிட பாதுகாப்பு, அணுப் பரவல், தேசியவாதம்,பொருளாதார வளர்ச்சி, தீவிர வாதம், சுற்றுச்சூழலியல், மனித உரிமைகள் போன்ற பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியது.

இத்துறையில் அரசியல், பொருளாதாரம், சமூகவியல், கலாசாரவியல்,மொழியியல் போன்ற பல பிரிவுகளை படிப்பதன் மூலமாக அரசியல், பொருளாதார உத்திகளை வகுப்பதன் நுணுக்கங்களை அறிய முடிகிறது.



நாம் வசிக்கும் நாட்டுடன் தொடர்புபடுத்தி வெளிநாட்டு மற்றும் உலகப் பிரச்சினை களைப் பற்றியும், அமைப்பு களைப் பற்றியும் படிக்கும் துறையே ஐ.ஆர். எனப்படும் சர்வதேச உறவுகள் துறையாகும். இதில், சர்வதேச நிறுவனங்கள் (எம். என்.சி) ,அரசு சாரா சேவை, சர்வ தேச அரசுத் தொடர்பு நிறுவனங்கள் (ஐ.ஜி.ஓ) ஆகியவை பற்றிய பகுதிகளும் இடம் பெறுகின்றன.

இதைப் படிப்பதற்கு உள்நாட்டு அரசியல் சூழல் பற்றிய ஆர்வம் மற்றும் உலகளாவிய பார்வையும் அவசியம் தேவை. நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை மட்டும் பார்க்காமல் உலகளவில் நடக்கும் நிகழ்ச்சிகள் எப்படி நம் நாட்டு நிகழ்வுகளைப் பாதிக்கின்றன என்ற பார்வையும் இருக்கவேண்டும். சிறுவயது முதலே நாளிதழ்களையும்,பல்வேறு இதழ்களையும் படித்துவரும் வழக்கம் கொண்டவர்களுக்கு இத்துறை பெரிய ஆர்வத்தைத் தூண்டும் துறையாக அமையும்.

பல்வேறு துறைகளுடன் இத்துறை தொடர்புடைய துறை என்பதால், இங்கு பணி வாய்ப்புகள் ஏராளமாக இருக்கின்றன. இத்துறையில் பட்டம் அல்லது ஆராய்ச்சி படிப்புகளை முடிப்பவர்களுக்கு எதிர்கால பாதைகள் தெளிவாக அமைகின்றன.

இத்துறை படிப்புகளில் ஆராய்ச்சி, தகவல் தொடர்பு, கட்டுரை எழுதுதல், கணிதவியல், கொம்பியூட்டர் பயன்பாடு, பொதுத் திட்ட ஆய்வு, ஓடியோ வீடியோ தயாரிப்பு என்ற பல்வேறு பயிற்சிகளும் தரப்படுகின்றன.

எனவே, இப் படிப்புகளை படிப்பவர்கள் கல்வித்துறை, ஆராய்ச்சித்துறை, தூதரகப் பணி, நிர்வாகப் பணி,சீட்டப்பணி,இதழியல் என்.ஜி.ஓ.என பல்வேறு பணி வாய்ப்புகளை பெறலாம்.சர்வதேச உறவுகள் துறை நவீன உலகத்தில் பல்வேறு நபர்களின் கோணத்தில் அரசியலை ஆராயும் உத்திகளை கற்றுக் கொடுக்கிறது.அதேபோல், பலம், பிரச்சினைகள், நாகரீகம், ஆயுதக் கட்டுப்பாடு, தீவிர வாதம்,சமூக மாற்றம், வெளிநாட்டுத் திட்டம் , மனிதாபிமான உதவிகள்,சர்வதேச அரசியல் பொருளாதாரம் ஆகியவற்றிலும் பயிற்சி தருகிறது.

இதனால் பன்னாட்டு உறவுகளைப் பற்றி படித்தவர்களுக்கு பல்வேறு பணி வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆர்க்கிவிஸ்ட், டெமோகிராபர், டிப்ளமேட், வெளிநாட்டு உறவு குறித்த ஆய்வாளர், வெளியுறவு அதிகாரி, இமிகிரேஷன் சிறப்பு அதிகாரி, இன்டலி ஜென்ஸ் ஸ்பெஷலிஸ்ட், லாங்குவேஜ் ஸ்பெஷலிஸ்ட் போன்ற பணிவாய்ப்புகள் கிடைக்கின்றன. வெறும் தகுதிகளை விட இத்துறை குறித்த நுணுக்கமான திறன்கள் தான் பணி வாய்ப்புகளை கொடுக்கின்றன.இத்துறை பல்வேறு பிரிவு களை உள்ளடக்கியது என்பதால் சர்வதேச உறவுகள் துறையில் பட்டம் பயிலுபவர்கள் கூடுதலாக ஒரு சட்டப் படிப்பும் முடிந்தால் அது மிகவும் பலன் தரக் கூடியதாக அமைகிறது. பட்டப் படிப்பில் அரசியல் அறிவியல், வரலாறு, பொருளாதாரம் போன்றவற்றை படித்து சர்வதேச உறவுகள் துறையில் பட்டமேற்படிப்புகளைப் படிக்க அறிவுறுத்தப்படுகிறது. சர்வதேச உறவுகள் படிப்பை வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் படிக்கலாம்.

நியூயோர்க் பல்கலைக்கழகம்,ஜோர்ஜ்டவுன் பல்கலைக்கழகம் போன்றவற்றில் இணைய ஜி.ஆர்.இ டோபல் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அவசியம். இதற்கு ஆண்டுக்கு சுமார் 40 ஆயிரம் டொலர்கள் வரை கல்விக் கட்டணமாக செலவாகும்.சர்வதேச உறவுகளை முடித்தவர்களுக்கு உள்நாட்டிலும், அயல் நாடுகளிலும் நல்ல வேலைவாய்ப்புகள் உள்ளன. பல்கலைக் கழகங்களில் ஆசிரியர் பணி,என்.ஜி.ஓ. அல் லது இதழியல் துறைகளில் பணிவாய்ப்பு பெறலாம். இந்தியாவில் கொல்கத்தாவில் உள்ள ஜாதவ்பூர் பல்கலைக் கழகம்,டில்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், கோட்டயத்திலுள்ள சர்வதேச உறவுகள் மற்றும் அரசியல் மையம் ஆகியவற்றில் இத்துறை யின் சிறப்பு படிப்புகளைப் படிக்கலாம்.முடிந்தால் எமது மாணவர்களும் இத்துறையில் படிப்பை மேற்கொண்டு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குங்கள்.

ஆர்.யூ.பாலமுருகன்




## இன்னும் உங்கள் வலை மனையைக் கட்டவில்லையா? 03




Google Blogger/Blogspot ஆகஸ்ட் 1999 இல் சதா பீர் குடித்துக் கொண்டிருந்த மூன்று நண்பர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தளமே பிளாக்குகளுக்கான சேவையைத் தொடங்கியது. அப்போது இதனை பைரா லேப்ஸ் (Pyra Labs) என்ற பெயரில் நிறுவனமாக இயங்கியது. கூகுள் இதனை 2003 ஆம் ஆண்டில் வாங்கியது. இந்தத் தளத்தில் பிளாக் உருவாக்கும் உதவியினைப் பெற முயற்சிப்பவர்களுக்கு ஒரு சந்தேகம் வரும். இதனை 'Blogger.com' அல்லது'Blogspot.com'என்பதா? இரண்டுமே ஒன்றுதான். எந்தப் பெயரை யூ.ஆர்.எல். ஆக அமைத்தாலும் ஒரே தளத்திற்குத் தான் செல்லும். ஆனால் இதில் பிளாக் ஒன்றை உருவாக்கி அதற்கு உங்கள் பெயருடன்'Blogspot.com' என்றுதான் கிடைக்கும். இந்த தளத்தின் மூலம் ஒரு பிளாக் தொடங்க வேண்டும் என்றால் உங்களுக்கு ஜிமெயில் முகவரி ஒன்று வேண்டும். இதுவரை இல்லை என்றால் உடனே ஒன்று தொடங்கிக் கொள்ளுங்கள். இது எளிது மட்டுமல்ல ; இலவசமும் கூட என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். நீங்கள் பிளாக் அமைப்பதில் புதியவர் என்றால் இந்த தளத்தில் தொடங்குவதே நல்லது.

இது இலவசம் என்பதால் மட்டுமல்ல மிக எளிதாக இங்கு பிளாக் ஒன்றை அமைக்கலாம் என்பதே. இது இலவசம் என்பதாலேயே சில விடயங்கள் நாம் விருப்பப்படாமலேயே நம் பிளாக்கில் இடம்பெறும். நம் பிளாக்கின் மேலாக நீள் செவ்வகக் கட்டம் ஒன்றுஇருக்கும்.

அதில் பிளாக் லோகோ ஒன்று இடம்பெறும். அதனை அடுத்து Next என்று ஒரு பட்டன் இருக்கும். இதில் கிளிக் செய்தால் உங்கள் பிளாக் போல அமைக்கப்பட்டிருக்கும் மற்ற பிளாக்குகளுக்கு நீங்கள் எடுத்துச் செல்லப்படுவீர்கள் .இது உங்கள் பிளாக்குகளைப் பார்வையிடுபவர்களின் கவனத்தை உங்கள் பிளாக்கிலிருந்து இழுத்து மற்றவர்களின் பிளாக்குகளுக்கு அல்லவா கொண்டு செல்லும். இதனை நீக்க முடியாது. எச்.டி. எம்.எல். தொழில்நுட்பம் மற்றும் சிஸ்டத்தில் வல்லுநராக இருந்தால் இதனை நீக்குவதில் முயற்சிக்கலாம்.அல்லது அப்படியே விட்டு விடலாம்.ஆனால் அப்ப்டி செய்வது கூகுள் நிறுவனம் விதிக்கும் விதிமுறைகளுக்கு எதிரானதாகும். கூகுளின் Blogger .com கூகுளின் தளத்தின் மூலம் பிளாக் அமைப்பதில் பல அனுகூலங்கள் கிடைக்கின்றன. இதன் வளைந்து கொடுக்கும் தன்மை நமக்கு அதிகம் உதவுகிறது. நீங்கள் எந்த அளவிலும் எவ்வளவு ஸ்பேஸ் எடுத்தும் உங்கள் பிளாக்கினை அமைக்கலாம் .பிளாக் அமைப்பதற்குத் தரப்படும் இன்டர்பேஸ் அருமையாக எளிமையாக உதவிகளைத் தருகிறது. இங்கு உங்கள் பிளாக்குகளுக்கான ரெம்ப்ளேட்டுகள் நிறையக் கிடைக்கின்றன. இங்கிருந்து மேலும் பல ரெம்ப்ளேட்டுகளைத் தேடி எடுத்தும் பயன்படுத்தலாம்.

Blogger .com தளத்தின் இன்னொரு சிறப்பு உங்கள் பிளாக் தனி இலவச டொமைன் ஆக இருப்பது தான் உங்களுடைய பெயர் டொட் பிளாக்ஸ்பொட்டொட் கொம் என் உங்கள் பிளாக் டொமைன் பெயரில் இருக்கும். இதுபோல் இலவசமாக டொமைன் ஒன்றை பிளாக்கிற்குத் தருவது இந்தத் தளம் மட்டுமே.

(வளரும்)

## அசூஸின் புதிய டச் ஸ்கிரீன் கொம்ப்யூட்டர்



. 15 அங்குல டச் ஸ்கிரீன் திரையுடன் கூடிய மொனிட்டருடன் அசூஸ் நிறுவனத்தின் Asus Eee Top ET1602 கொம்ப்யூட்டர் விரைவில் விற்பனைக்கு அறிமுகப்படுத் தப்படவுள்ளது.

இதில் Intel Atom N270 புரோசசர் மையமாக இயங்குகிறது. முதன் முதலாக கொம்ப்யூட்டர் பயன்படுத்துபவரை முன்னிறுத்தி இந்த கொம்ப்யூட்டரை விற்பனைக்கு அறிமுகப்படுத்தி உள்ளதாக அசூஸ் அறிவித்துள்ளது.ஆனால், விலை 880 டொலராக இருக்கும் என தெரிவித்துள்ளது.



HP TouhSmaart PC, Sony VAIO JS 190J மற்றும் Lenovo Idea Centre A 600 டி ஆகிய கொம்ப்யூட்டர்களுக்கு போட்டியாக இந்த கொம்ப்யூட்டர் சந்தையில் வலம் வரவுள்ளது.

இதில் 1 ஜிபி டிடி ஆர் மெமரி சிப் மற்றும் 150 ஜிபி சடா ஹார்ட்டிஸ்க் இணைக்கப்பட்டுள்ளது.

மற்றவற்றில் இல்லாத ஓன்போர்ட் கிறாபிக்ஸ் வசதி இதில் தரப்பட்டுள்ளது. 1.3 மெகா பிக்ஸெல் கமரா, ஜிகாபிட் ஈதர்நெட், இரண்டு யு.எஸ்.பி. போர்ட் மூன்று ஓடியோ போர்ட் 5.1 சனல் கனெக்ஷன் மற்றும் வை – பி இணைப்பு வசதிகள் தரப்பட்டுள்ளன.

## மோசர்பேயர் நிறுவனத்தின் யு.எஸ்.பி., டிரைவ்



8ஜிபி திறன் கொண்ட யு.எஸ்.பி. டிரைவ் ஒன்றினை மோசர் பேயர் வெளியிட்டுள்ளது. மிக வேகமாக டேட்டோ பரிமாற்றம், மடக்கி விரித்துப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் மற்றும் மிகச் சிறியதான அளவில் இருப்பது என்ற சிறப்பம்சங்களுடன் இது உள்ளது. பிளாஷ் டிரைவ்கள் விலை தொடர்ந்து குறைந்து வருவதும், அதன் கொள்வனவு திறன் அதிகரித்து வருவதும் இந்த டிரைவ்களைத் தயாரிக்கும் நிறுவனங்களிடையே போட்டியை உருவாக்கியுள்ளன.

அதனால் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்கேற்றபடி புதிய புதிய மொடல்களின் வடிவமைப்புகளில் பிளாஷ் டிரைவ் கள் வந்துகொண்டே இருக்கின்றன. இதில், புதிய நிறுவனமான மோசர்பேயர் வந்துள்ளது. சிடிக்களைத் தருவதில் சர்வதேச பெயர் பெற்ற இந்நிறுவனம், தற்போது பிளாஷ் டிரைவ் வழங்குவதில் இறங்கியுள்ளது. மோசர் பேயர் இதனை தயாரிக்கவில்லை.

தனக்காகத் தயாரித்து வழங்கும் நிறுவனத்திடம் பெற்று தன் பெயரில் வெளியிடுகிறது. பிளாஷ் டிரைவ் மார்க்கெட் நன்றாக இயங்குவதால் இந்த ஏற்பாடு தற்போது SW801E என்ற எண்ணுடன் வந்துள்ள மோசர் பேயர் பிளாஷ் டிரைவ் 8ஜிபி டேட்டாவினைக் கொண்டுள்ளது.


இந்த டிரைவ் ஒரு கூட்டுக்குள் மடக்கி வைத்துப் பயன்படுத்தும் அளவில் அமைந்துள்ளது. இதனால் டிரைவ் சிறிய அளவில் இருக்கிறது. டிரைவிற்குக் கூடுதல் பாதுகாப்புக் கிடைக்கிறது. இதன் எடை 12 கிராம். நீளம் 55 மிமீ, தடிமன் 9மி.மீ. அகலம் 17 மி.மீ. மேல்புறம் றப்பரினால் அமைக்கப்பட்டுள்ளதால் கைகளில் இறுக்கிப் பிடிக்க ஏதுவாக உள்ளது. இது FAT32 என்ற பைல் அமைப்பில் போர்மட் செய்யப்பட்டிருந்தாலும் இதனை NTFS என்ற பைல் அமைப்பிலும் போர்மட் செய்திட முடியும்.



அவ்வாறு செய்திடும் பட்சத்தில் 4 ஜிபி அளவிலான பைலையும் கூட இதில் பதிய முடியும். இந்த டிரைவ் சராசரியாக விநாடிக்கு 18 எம்.பி. என்ற அளவில் டேட்டாவைப் படிக்கிறது. எழுதும் வேகம் 7.3 எம். பி. ஆகும்.

## நான்காவது ஒரு நாள் போட்டி

# ஆஸியை வீழ்த்திய தென்னாபிரிக்கா தொடரை 3:1 என தனதாக்கியது



(போர்ட் எலிசபெத்)

கிப்ஸின் சிறப்பான சதத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி நான்காவது ஒரு நாள் போட்டியிலும் 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது.

இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை தென்னாபிரிக்க அணி 3:1 என்ற கணக்கில் தனதாக்கியது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி 2:1 என்ற கணக்கிலும் இருபது-20 தொடரை தென்னாபிரிக்க அணி 2:0 என்ற கணக்கிலும் கைப்பற்றின.

தொடர்ந்து நடைபெற்ற 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதல் 3 ஆட்டங்கள் முடிவில் தென்னாபிரிக்க அணி 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்நிலையில் 4 ஆவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் போர்ட் எலிசபெத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத் தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப் படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய தென்னாபிரிக்க அணி கிப்ஸ்-டி வில்லியர்ஸின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 317 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் கிப்ஸ் 116 பந்துகளில் (9 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 110 ஓட்டங்களையும் ஏ.பி.வில்லியர்ஸ் 74 பந்துகளில் (பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 84 ஓட்டங்களையும் டுமினி 25 பந்தில் (4 பவுண்டரி அடங்கலாக) 40 ஓட்டங்களையும் எடுத்தனர்.


பந்துவீச்சில் ஜோன்சன், ஹார்வூட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பிரக்கன், கோப்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 318 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஸ்ரையன்- வான் டேர்மேர்வின் ஜோடியின் துல்லியமான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 45.5 ஓவர்களில் 256 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஹடின் 61 பந்துகளில் (7 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங் கலாக) 78 ஓட்டங்களையும் அணித் தலைவர் பொன்டிங் 53, மைக்கல் கிளார்க் 50, கோப்ஸ் 31 மற்றும் டேவிட் ஹசி 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 4 விக்கெட்டுக்களையும் வாண்டேர் மேர்வ் 3 விக்கெட்டுக்களையும் பார்னல், மோர்கல் மற்றும் போத்தா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ்வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி தொடரை 3:1 என்ற கணக்கில் தனதாக்கியது. இப்போட்டியில் தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்த கிப்ஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.



தென்னாபிரிக்காவில் ஐ.பி.எல். தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி நடக்கிறது. இதில் ரசிகர்களை மகிழ்விக்க பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் நடன மங்கைகள் ஒத்திகை நிகழ்ச்சி பெங்களூரில் சின்னச்சாமி மைதானத்தில் நடந்தது.

# மெழுகுச்சிலையில் மெய்மறந்த சச்சின்

(மும்பை)

மும்பையில் சச்சினின் தத்ரூப மெழுகுச்சிலையைப் பார்த்த மகிழ்ச்சியில் நிஜ சச்சின் மெய்மறந்தார்.



புகழ்பெற்ற இலண்டன் மேடம் டுஸாட்ஸ் மியூசியம் உலகின் முக்கிய பிரமுகர்களின் சிலையை வடிவமைத்து அவர்களுக்கு புகழ் சேர்த்து வருகிறது.

இந்தியாவிலிருந்து மகாத்மா காந்தி, இந்திரா, பாலிவூட் நட்சத்திரங்களான அமிதாப் பச்சன், சல்மான் கான், ஐஸ்வர்யா ராய், ஷாருக் கான் ஆகியோருக்கு இங்கு மெழுகுச் சிலை உள்ளது.

விளையாட்டுத் துறையில் இந்தியா சார்பில் முதன் முதலாக நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சினுக்கு சிலை தயாரிக்க இந்நிறுவனம் முடிவு செய்தது. சுமார் 3 மாதங்களாக ஒரு கோடி ரூபாய் செலவில் இலண்டனில் தயாராகி வந்தது சச்சினின் மெழுகுச் சிலை.



இதற்கு சச்சின் தனது ஆடைகளை வழங்கி இருந்தார். நேற்று முன்தினம் மும்பையில் இச்சிலை யை சச்சின் திறந்து வைத்தார்.

அப்போது பேட்டி அளித்த சச்சின் கூறியதாவது, மேடம் டுஸாட்ஸ் மியூசியத்தில் ஒரு கிரிக்கெட் வீரராக நான் இடம்பெற்றது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது.

கிரிக்கெட் மீது நான் கொண்ட ஈடுபாட்டின் பிரதிபலிப்பாக இச்சிலையை கருதுகிறேன்.

இதைப் பார்த்தவுடன் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை விபரிக்க முடியவில்லை. மெய்மறந்து விட்டேன். இச்சிலை அப்படியே தத்ரூபமாக இருந்தது. எனது மகன் விளையாட்டாக அந்த சிலையில் உள்ள துடுப்பை எடுத்து விளையாட முயற்சித்தான். ஆனால் நான் அருகில் செல்ல வேண்டாம் என தடுத்து விட்டேன்.


### உலக கோப்பை கனவு


ஒவ்வொரு கிரிக்கெட் வீரருக்கும் ஒரு கனவு உண்டு. இந்தியாவுக்காக உலககோப்பையை வென்று தர வேண்டும் என்பதே எனது கனவு இவ்வாறு சச்சின் கூறினார்.

இதற்கு முன் மேடம் டுஸாட்ஸ் மியூசியத்தில் மேற்கிந்திய தீவுகள் வீரர் பிரையன் லாரா, இங்கிலாந்தின் இயன் பொத்தம், அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன் ஆகிய கிரிக்கெட் ஜாம்பவான்களுக்கு மெழுகுச் சிலை உள்ளது.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்... 61








அத்துடன் முரளிதரன் பந்து வீசும் போது அவரது முழங்கை எலும்புகளின் அசைவுகள் பற்றி பக்கச் சார்பற்ற தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காக மேற்கொண்டு ஆய்வுகளைச் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதற்கு ஏற்கனவே செய்யப்பட்ட ஆய்வுகள் மூலம் பெறப்பட்டு கணனிகளில் சேமிக்கப்பட்ட தகவல்கள் பெறப்பட்டது.

இது இவ்வாறிருக்க டாக்டர் டிடி ரெய்டின் ஆய்வுகளின் பிரகாரம் முரளிதரனுக்கு பிறப்பிலேயே பந்து வீசும் வலது முழங்கை 32 பாகை வளைவும் இடது முழங்கை 26 பாகை வளைவும் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அத்துடன் முரளிதரன் பந்து வீசும் வலது கை தோள்பட்டை மேலும் கீழும் அசையும் போது அவரது முழங்கையும் மேலும் கீழும் அசையும்.

அப்பொழுது முரளிதரனின் முழங்கை வளைவது போன்று தோற்றமளித்தாலும் உண்மையில் வளைவது இல்லை என டாக்டர் டிடி ரெய்ட் கண்டறிந்தார்.

இப்பிரச்சினை தொடர்பான விவாதத்தில் (சில அவுஸ்திரேலிய வீரர் சுட்டிக்காட்டிய விதத்தில்) துரதிர்ஷ்ட வசமான அம்சம் யாதெனில்,

ஏற்கனவே நடைபெற்ற உடற்கூற்று ஆய்வில் கையை நீட்டிப் பந்து வீசுவது பற்றிய பரிசோதனையை மேற்கொள்ளாததுதான். (பயணிக்கும்)

பாலா

# எண் விளையாட்டு-64

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | 2 | 1 | 5 | | | 4 | 2 | 1 | 3 |
| | 1 | 3 | 9 | | | 9 | 7 | 2 | 8 |
| | 4 | 2 | 8 | 3 | 1 | | 8 | 3 | 9 |
| | 9 | 8 | | 5 | 6 | 8 | 9 | | |
| | | | 1 | 2 | 4 | 5 | 3 | | |
| | | | 3 | 1 | 2 | 7 | | 6 | 1 |
| | 4 | 9 | 8 | | 7 | 9 | 2 | 8 | 6 |
| | 2 | 7 | 4 | 9 | | | 7 | 9 | 8 |
| | 1 | 3 | 2 | 6 | | | 1 | 7 | 9 |

***போட்டிவிதிகள்:*** மேலிருந்து கீழ் தொடங்கும் வெள்ளைக் கட்டங்களில் நிரப்பப்படும் எண்களின் கூட்டுத் தொகை, கட்டங்களின் மேல்புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்ணுக்கு சமமாகவர வேண்டும். இடமிருந்து வலமாக செல்லும் கட்டங்களுக்கும் இதே விதிதான். அக்கட்டங்களுக்கான கூட்டுத் தொகை இடப் புறம் கொடுக்கப்பட்டுள்ளது. 1 முதல் 9 வரையான எண்களை பயன் படுத்த வேண்டும். ஆனால் ஒருவரிசையில் பயன்படுத்திய எண் திரும்பவரக் கூடாது.

### நேற்றைய பகுதிக்கான விடை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | 2 | 1 | 5 | | | 4 | 2 | 1 | 3 |
| | 1 | 3 | 9 | | | 9 | 7 | 2 | 8 |
| | 4 | 2 | 8 | 3 | 1 | | 8 | 3 | 9 |
| | 9 | 8 | | 5 | 6 | 8 | 9 | | |
| | | | 1 | 2 | 4 | 5 | 3 | | |
| | | | 3 | 1 | 2 | 7 | | 6 | 1 |
| | 4 | 9 | 8 | | 7 | 9 | 2 | 8 | 6 |
| | 2 | 7 | 4 | 9 | | | 7 | 9 | 8 |
| | 1 | 3 | 2 | 6 | | | 1 | 7 | 9 |

# யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களை அனுப்ப முடியும்

## ஐ.நா. தெரிவிப்பு

மனிதநேயப் போர் நிறுத்தம் அல்லது இலங்கைப் படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்களின் தற்காலிக நிறுத்தம் என்பது நடைமுறையில் உள்ள நிலையில் நாம் இதனைப் பயன்படுத்தி அதிக உதவிப் பொருட்களை அனுப்பலாம் என எண்ணியிருந்தோம் ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தக் குறுகிய காலகட்டம் போதுமானதாக அமையவில்லை என ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான பிரதிநிதி ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் தங்களால் முடிந்தவரை அப்பகுதியில் இருந்து வெளியேற யுத்த நிறுத்தத்தை பயன்படுத்த முடியும்.

ஆனால் விடுதலைப் புலிகள் மக்கள் வெளியேற அனுமதிக்க மறுக்கிறார்கள். வெளியில் செல்பவர்கள் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். யுத்த நிறுத்தம் அமுலுக்கு வர முன்னர் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள பொதுமக்களை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றுள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-5)

# நாடாளுமன்றத் தேர்தலை நடத்தக் கோருகிறது ஐ.தே.க.!

(கொழும்பு)

உடனடியான நாடாளுமன்ற தேர்தல் ஒன்றினை நடத்துமாறு அரசாங்கத்தினை ஐக்கிய தேசியக்கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார். வடமேல் மற்றும் மத்திய மாகாண சபை தேர்தல்களில் பொதுமக்களில் உண்மையான நிலைப்பாடு வெளியாகவில்லையென அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கு உண்மையில் மக்கள் ஆதரவு இருக்கும் என்றால் எதற்காக பொதுத் தேர்தல் ஒன்றினை நடத்த பின் வாங்குகின்றனர் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் அரசாங்கம் ஏற்கனவே யுத்தத்தை விற்றும் பல்வேறு அழுத்தங்களை பிரயோகித்தும் வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளின் தேர்தல்களை வெற்றி கொண்டதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ச-14)

# யுத்த நிறுத்தம் முடிவு; அச்சத்தில் வன்னி மக்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தின் யுத்த நிறுத்தம் நேற்று நள்ளிரவுடன் முடிவுக்கு வந்ததையடுத்து என்ன நடக்கப்போகிறதோ என்ற ஓர் அச்ச உணர்வு பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருக்கும் மக்கள் மத்தியில் மேலோங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு நாள் அமைதிக்குப் பின்னர் மோதல்கள் மோசமாக வெடிக்கலாம் என்று அந்த மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை அரசாங்கத்தின் யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருந்தபோதிலும் கடந்த திங்கட்கிழமை இரவு 10 மணிமுதல் அதிகாலை வரையில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள வலைஞர்மடம் பகுதியின் எல்லைப்புறத்தில் இரு தரப்புக்குமிடையே கடும் துப்பாக்கிச் சமர் தொடர்ச்சியாக இடம்பெற்றதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போர் நிறுத்தம் இருந்த காலத்தில் 93 பொதுமக்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் புதுமாத்தளன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. 6 பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இரண்டு தினங்களிலும் பொதுவாக ஷெல் தாக்குதல்கள் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்ற போதிலும் துப்பாக்கிச் சண்டைகள் நடைபெறுகின்ற பகுதிகளில் ஒன்று இரண்டு மோட்டார் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிக போர் நிறுத்தத்தின் முதல் நாள் அன்று இராணுவம் சிவிலியன்கள் மீது தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் நடத்தியதாக விடுதலைப் புலிகள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டை மறுத்துள்ள இராணுவம், அரச படைகளின் மீது கடுமையான இயந்திரத் துப்பாக்கி தாக்குதல்களை விடுதலைப் புலிகளே மேற்கொண்டதாக கூறியிருக்கிறது. (ச-5,14)

## மோதலில்...

மக்கள் விரும்பியவாறு போய்வரும் நிலை. அங்கு உடனடியாக ஏற்பட்டுவிடும் என்று நான் நினைக்கவில்லை. எத்தனைபேர் தாங்கள் விரும்பியபடி செல்ல விரும்புகிறார்கள் என்பதுதான் முக்கிய வினாவாக இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரை மோதல் நிறுத்தத்தை அறிவிக்கும்போது இந்தப் பிரச்சினை குறித்து எவரும் கவனத்தில் எடுக்கவில்லை என்பதே உண்மை என அவர் தெரிவித்தார். (ச-14)

## பயணிகள்...

சேவைக்காக அனுமதிச் சீட்டை பெற்றோர் மற்றும் அவசர தேவை உடையோர் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ்.புகையிரத நிலையத்தில் ஒன்று கூடுமாறு அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச)

## சமாதான...

பின்னர் எம்மால் அனுசரணையாளர்களாகப் பணியாற்ற முடியாது என்று தெரிவித்தார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அனுசரணையாளர்கள் என்ற நிலையிலிருந்து நோர்வேயை நீக்குவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்தே ஜோன் ஹான்சன் பவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒஸ்லோவிலுள்ள இலங்கைத் தூதரகம் தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து சமாதான அனுசரணையாளர்கள் நிலையிலிருந்து நோர்வேயை நீக்குவதாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-5)

## புதுமாத்...

நேற்று முன்தினம் 496 பேர் காயமடைந்த மற்றும் அவர்களின் உறவினர்கள் புதுமாத்தளனில் இருந்து புல்மோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த நிலையில் இது வரையில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட 21 கப்பல் சேவைகளில் ஒன்பதாயிரம் பேர் வரையில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக சரசி விஜேரட்ன தெரிவித்துள்ளார். (ச-5,14)

## வன்னியில்...

உணவுப் பொருட்கள் பாதுகாப்பு வலயப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன என்றும் அடுத்த உணவுக் கப்பல் இன்னும் ஒரு வாரத்தின்பின்பே புதுமாத்தளன்பகுதிக்குச்செல்லும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அங்குள்ள மக்கள் உயிர் வாழ்வதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேவேளை வன்னிப் பிரதேச பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் புதுவருட தினமாகிய நேற்று கஞ்சிவாங்குவதற்குசிறுவர்கள் முண்டியடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-1)

## இந்திய...

ஏற்கனவே இலங்கையில் பணியாற்றுகின்றன எனவும் அவர் கூறினார்.

இலங்கை தமிழ் மக்களின் நியாயமான உரிமைகள் ஜனநாயக முறையில் அதிகாரப் பகிர்வு மூலம் கிடைக்கப்பெற வேண்டும். அதை இந்தியா தொடர்ந்து வலியுறுத்தும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அங்கிருந்து வந்து இந்திய அதிகாரிகளுடன் பேசட்டும். அவர்களை அழைக்க வேண்டும் என்று எங்கள் மீது எந்த நிர்ப்பந்தமும் இல்லை. எங்களுக்கு உள்ள ஒரே நிர்ப்பந்தம் இலங்கைத் தமிழர்களின் நலனை பாதுகாக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்பும் அக்கறையும் மட்டும்தான் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

# ஆயுதங்களைக் கைவிட்டால்...

பிரச்சினையில் சரித்திரத்தைக் கவனத்தில் கொண்டால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடும் வரையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கு அரசாங்கத்தினால் இணங்க முடியாது என ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்குமூச்சு விடுவதற்கும், படையினரின் முற்றுகைக்குள் அகப்பட்டுள்ள அவர்களுடைய தலைவர்கள் வெளியே தப்பிச் செல்வதற்கும் நேரம் தேவையாக இருக்கிறது எனத் தெரிவித்த அமைச்சர், அதனால்தான் நிரந்தரமான போர் நிறுத்தமொன்றை விடுதலைப்புலிகள் கோருகின்றார்கள் எனவும் குற்றம் சாட்டினார்

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 48 மணிநேர தாக்குதல் இடைநிறுத்தத்தை ஒரு கண்துடைப்பு ஏமாற்று வேலை என நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையொன்றில் விமர்சித்த விடுதலைப்புலிகள், மனிதாபிமானமும் அரசியல் தீர்வுக்கான அடித்தளமும் அனைத்துலக அனுசரணையும் கொண்ட நிரந்தரப் போர் நிறுத்தமே தேவை என வலியுறுத்தியிருந்தனர்.

இது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட போதே, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே நிரந்தரப் போர் நிறுத்தமொன்றை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் என அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை மீறும் வகையில் நேற்று மேற்கொண்ட குறிசூட்டுத் தாக்குதல் ஒன்றில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டு மற்றொருவர் படுகாயமடைந்திருப்பதாகவும் இராணுவ வட்டாரங்கள் குற்றம் சாட்டியிருந்தன.

இதேவேளை தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட 2 நாள் மோதல் நிறுத்தத்தின் போது விடுதலைப் புலிகள் மக்களை கட்டாயப்படுத்தி வேலை வாங்கி, பாதுகாப்பு மண் அரண்களை உருவாக்கிக் கொண்டுள்ளதாக இலங்கை வெளியுறவுத்துறை செயலர் டாக்டர் பாலித கோஹன்ன குற்றம் சாட்டினார்.

போர் நிறுத்தத்தை நீடிப்பது பற்றி பேசுவதை விட மோதல் நிறுத்த காலத்தில் புலிகள் தமது கட்டுப்பாட்டில் இருந்தவர்கள் வெளியேற அனுமதிக்க மறுத்தது ஏன் என்ற கேள்வி முதலில் எழுப்பப்பட வேண்டும் என்று அவர் கூறினார்.

புலிகளின் கருத்து குறித்து வெளியுறவுத் துறைச் செயலர் பாலித கோஹன்னவிடம் கேட்டபோது, அவர் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எந்தவிதமான நிபந்தனைகளையும் விதிக்கக்கூடிய நிலையில் இப்போது இல்லை என்றார்.

புலிகள் இப்போது தோற்றுவிட்டார்கள் ஈழம் என்ற மாயையும் கலைந்துவிட்டது, புலிகள் இப்போது செய்யவேண்டியது ஒன்றே ஒன்றுதான். அதாவது மக்களை மனித கேடயமாக பயன்படுத்துவதை விட்டுவிட்டு தமது ஆயுதங்களை அவர்கள் கீழே போடவேண்டும் அவ்வளவுதான்.

அவர்கள் ஆயிரக்கணக்கான மக்களை பலவந்தமாக பிடித்து வைத்திருக்கிறார்கள். அவர்களை புலிகள் விடுவிக்க வேண்டும். எவரையும் பலவந்தமாக தடுத்து வைப்பது ஒரு குற்றச்செயல் என்று பி.பி.சி தமிழோசையிடம் பாலித கோஹன்ன தெரிவித்தார். (ச-5,14)


நாகம்ஸ் சினிமா - சுன்னாகம்

நேற்று முதல்


சுந்தர் C, நமீதா மற்றும் பலர் நடித்த




காட்சிகள்:- 10.30, 2.30, 5.30


## மரண அறிவித்தல்

### திருமதி பத்திநாதர் உத்தரியம் (அருமமுத்து)



பிறப்பு-25.07.1925 இறப்பு-13.04.2009

இல. 07, 3ஆம் குறுக்குத்தெரு நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்திநாதர் உத்தரியம் (அருமமுத்து) நேற்று முன்தினம்-13.04.2009 திங்கட்கிழமை- இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்திநாதரின் அன்பு மனைவியும், சிறில், றோசுமலர், தேவராஜா, தங்காவரணம், சின்னக்கிளி, விசயன், சுசிலா, சந்திரன், இந்திரன், வனிதா, விஜயா, ஜெயரட்ணம் (நோர்வே), றோசுக்கிளி, ரதி ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

அருட்சகோதரன் லியோனியஸ் (இந்தியா), அருட்சகோதரி மேரிமலர் (பெல்ஜியம்), அருட்சகோதரி இராஜேஸ் (நீர்கொழும்பு), அருட்சகோதரி காமலின் (யாழ்ப்பாணம்), றொக்சன் (வலம்புரி ஊழியர்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணிக்கு பரலோகமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

07, 3ஆம் குறுக்குத்தெரு, நாவாந்துறை.

தகவல்: குடும்பத்தினர்.

(C-2347)


இட, நேர நெருக்கடி காணப்பட்ட போதிலும் மாணவர்களின் நலன்கருதி 2வதும் புதியதுமான பிரிவை ஆரம்பிக்கின்றோம்.

A/L - 2011 கலை வர்த்தகப் பிரிவுகள்

ஏப்பிரல் 18

கலை 8 மணி | வர்த்தகம் 11 மணி

DMI ஸ்ரான்லி வீதி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

MATHS CENTRE M.M.V. Road, Nelliady.

A/L- 2011 பிரிவு II

கலைப்பிரிவு

ஆரம்பம்:- 16.04.2009 வியாழன் 7.30 AM

(C-2344)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.